தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### இந்த ஆண்டும் வடகிழக்கு பருவமழை பொய்த்தது

தமிழகத்தின் 31 மாவட்டங்களில் இந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழை போதிய அளவு பெய்யவில்லை. கன்னியாகுமரி தவிர பிற மாவட்டங்களில் சராசரியை விடக் குறைவாகவே மழை பெய்துள்ளதாக வானிலை மையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை கடந்த அக்டோபர் மாதம் தொடங்கியது. இந்த ஆண்டு சராசரி அளவைக் காட்டிலும் கூடுதலாக மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது. தற்போது பருவமழைக் காலம் கிட்டத்தட்ட முடிந்துவிட்டது எனலாம். இந்தநிலையில், தமிழகத்தில் வழக்கமான ஆண்டு சராசரியில் 30 சதவீதம் குறைவாகவே மழை பதிவாகியுள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. அதிகபட்சமாக திண்டுக்கல் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் 46 சதவீதம் குறைவாக மழை பெய்துள்ளது. திருப்பூரில் 45 சதவீதமும், அரியலூரில் 44 சதவீதமும் குறைந்துள்ளது. கடலூர், சென்னை உள்ளிட்ட வடகடலோர மாவட்டங்களில் சராசரியாக 80 செ.மீ மழை பதிவாக வேண்டும். ஆனால் இந்தாண்டு வெறும் 40 செ.மீ அளவு மழை மட்டுமே பெய்துள்ளது. காரணம் என்ன? கடந்த இரு மாதங்களில் வங்கக்கடலில் பைலின், ஹையான், ஹெலன், லெஹர், மாதி ஆகிய 5 புயல்கள் உருவாகின.

இவற்றில் ஹெலன், லெஹர் புயல்கள் தமிழகத்தை நோக்கி வரும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவை ஆந்திரத்தை நோக்கி நகர்ந்தது. இந்த புயல்கள் தமிழக வளிமண்டலப் பகுதியில் இருந்த ஈரப் பதத்தை உறிஞ்சிவிட்டதால் மழை பெய்யும் வாய்ப்பு குறைந்துவிட்டது. இதுவும் தமிழகத்தில் மழையளவு குறைந்ததற்கான முக்கிய காரணமாகும். வடகிழக்குப் பருவமழையின் சராசரி அளவு குறைந்ததற்கும் இதுவே காரணம்.

**இது குறித்து வானிலை மைய அதிகாரிகள் கூறியது:-**

தமிழகத்தில் ஆண்டுக்கு சராசரியாக 92 செ.மீ மழை பெய்ய வேண்டும். கடந்த 2005 லிருந்து 2011-ஆம் ஆண்டு வரை சராசரி அளவை விடக் கூடுதலாக மழை பெய்தது. ஆனால் கடந்த இரு ஆண்டுகளாக மழை அளவு குறைந்துள்ளது. கடந்த ஆண்டில் வடகிழக்கு பருவமழையின் அளவு 16 சதவீதம் குறைந்தது. இந்த ஆண்டு பருவமழை பற்றாக்குறை அளவு மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. எனினும், வடகிழக்குப் பருவமழையின் முழுமையான விவரம் டிசம்பர் இறுதிக்கு பிறகே தெரிய வரும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

**கோடையில் தண்ணீர் பஞ்சம் அபாயம்?**

இந்த ஆண்டு பருவமழை பொய்த்துப் போனதன் விளைவாக மாநிலத்தின் முக்கிய அணைகள் மற்றும் ஏரிகளின் நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வருகிறது. வரும் நாள்களிலும் மழை பெய்ய அதிக வாய்ப்பு இல்லாததால், அடுத்து வரும் கோடைக் காலத்தில் தமிழகத்தில் கடும் தண்ணீர் தட்டுப்பாடு நிலவும் என்ற அச்சம் எழுந்துள்ளது.

**முக்கிய அணைகளின் நீர்இருப்பு விவரம் (அடிக்கணக்கில்):-**

நீர் ஆதாரம் பருவமழைக்கு தற்போதைய முன்பு நீர்இருப்பு

(அக்.1) (டிச.19) ,மேட்டூர் 99.86 77.22, பவானிசாகர் 76.70 62.04, அமராவதி 67.95 37.46, பெரியாறு 124.30 117, வைகை 57.35 45.08, பாபநாசம் 106.40 95.55, மணிமுத்தாறு 56.89 75.70, பேச்சிப்பாறை 23.50 26.50, சாத்தனூர் 80.15 89.05, சோழையாறு 160.39 110.56, பரம்பிக்குளம் 71.55 60.50, ஆழியாறு 119.80 109.60, திருமூர்த்தி 35.54 20.23 சென்னையின் முக்கிய குடிநீர் ஆதாரங்களாக விளங்கும் பூண்டி, செம்பரம்பாக்கம், புழல் மற்றும் சோழவரம் ஏரிகளிலும் போதிய அளவு மழை பதிவாகவில்லை. இருப்பினும் ஆந்திராவில் இருந்து வரும் கிருஷ்ணா நீர், காட்டுமன்னார் கோவிலில் இருந்து வரும் வீராணம் நீர் ஆகியவற்றின் காரணமாக சென்னை ஏரிகளின் நீர்மட்டம் குறையவில்லை

**"நெல்லிற்கு மாற்றுப்பயிர் மக்காச்சோளம்'**



கோடையில் நெல்லிற்கு மாற்றுப்பயிராக மக்காச்சோளம் சாகுபடி செய்யுமாறு நீடாமங்கலம் வேளாண் அதிகாரி விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக வேளாண் கோட்ட உதவி இயக்குநர் ந. இளஞ்செழியன் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நெல் அறுவடைக்குப் பிறகு வாய்ப்புள்ள இடங்களில் மாற்றுப்பயிராக மக்காச்சோளம் சாகுபடி செய்யலாம். நிலத்தடிநீரை சேமிக்க தண்ணீர் அதிகம் தேவைப்படும் நெல் பயிரை தவிர்ப்பது நல்லது.

கடந்த ஆண்டு வடுவூர் பகுதிகளில் மக்காச்சோளம் சாகுபடி செய்து நல்ல மகசூல் மூலம் அதிக லாபம் அடைந்ததை உயர் அதிகாரிகள் பார்வையிட்டு பாராட்டினர். எனவே, இந்த ஆண்டும் மக்காச்சோளத்திற்கு மாறலாம். கால்நடை மற்றும் கோழி தீவனத்திற்கு மக்காச்சோளம் தேவை அதிகரித்து வருகிறது. இதனால் சந்தை வாய்ப்புகள் நன்றாகவுள்ளன.

மக்காச்சோளத்திற்கு தை பட்டம் (ஜனவரி, பிப்ரவரி) சிறந்தது. கோ-1, கோஎச் (எம்)-5, கோபிசி-1 மற்றும் தனியார் வீரிய ஒட்டு ரகங்களை பயன்படுத்தலாம். நிலத்தை நன்கு உழவு செய்து ஏக்கருக்கு 5 டன் மக்கிய தொழு உரம் மற்றும் சூப்பர்பாஸ்பேட் 118 கிலோ கலந்து அடியுரமாக இட வேண்டும். விதையளவு

ஏக்கருக்கு 8 கிலோ. விதையை ஒரு கிலோவிற்கு சூடோமோனஸ் 10 கிராம் வீதம் கலந்து 24 மணிநேரத்திற்கு பிறகு ஓர் ஏக்கருக்கு தேவையான ஒரு பாக்கெட் அசோஸ்பைரில்லம் மற்றும் ஒரு பாக்கெட் பாஸ்போபேக்டீரியாவை கொண்டு விதைநேர்த்தி செய்ய வேண்டும்.

பாருக்குபார் 60 செமீ. இடைவெளியும், செடிக்கு செடி 25 செமீ. இடைவெளியும் இருக்குமாறு விதைக்க வேண்டும். ஒரு சதுர மீட்டருக்கு 6 முதல் 7 செடி இருக்குமாறு பயிர் எண்ணிக்கையை பராமரிக்க வேண்டும்.

விதைத்த 25-வது நாளில் 66 கிலோ உரத்தில் பாதியை இட்டு மண்ணால் மூட வேண்டும். மீண்டும் 45-வது நாள் 33 கிலோ யூரியா, 25 கிலோ பொட்டாஷ் உரத்தை கலந்து இடவேண்டும். பார்களுக்கு குறுக்கில் 6 மீட்டர் நீளத்தில் பாசன வாய்க்கால் அமைக்க வேண்டும். களையை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 200 கிராம் அட்ரசின் 50% நனையும் தூள் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து விதைத்த 3 நாட்கள் கழித்து தெளிக்க வேண்டும். 45-வது நாளில் களைகளை எடுக்க வேண்டும்.

குழிக்கு இரண்டு விதைகள் முளைத்திருந்தால் 12-வது நாளில் குழிக்கு ஒன்று வீதம் வளர்ந்த செடியை விட்டுவிட்டு, மற்றதை பிடுங்கிவிட வேண்டும். பயிரின் தேவைக்கேற்ப தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பயிரின் வயதை கணக்கிட்டு அறுவடை செய்ய வேண்டும். மாற்றுப் பயிராக மக்காச்சோளத்தை சாகுபடி செய்து குறைந்த நீரில் நிறைந்த லாபம் எடுக்கலாம்.

## தர்ப்பூசணி சாகுபடி: 4 மாதத்தில் நல்ல லாபம்



விவசாயிகள் இத்தருணத்தில் தர்ப்பூசணி பயிரிட்டு, நவீன தொழில்நுட்ப முறைகள், பயிர் பாதுகாப்பு யுக்திகளைப் பின்பற்றினால், 4 மாதங்களில் அதிக விளைச்சலை பெற்று லாபம் சம்பாதிக்கலாம் என

தோட்டக்கலைத் துறையில் துணை இயக்குநராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற ச.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தர்ப்பூசணியை நவம்பர்-டிசம்பர் மாதங்களிலும், நிலப்போர்வை அமைப்புடன் நுண்நீர் பாசன சாகுபடி முறையிலும் பயிரிடலாம். இந்த தர்ப்பூசணி பயிரால் விவசாயிகள் அதிக வருவாய் பெற வாய்ப்பு உள்ளது.

தர்ப்பூசணியில் சுகர் பேபி, சுகந்தி, விசால், கிரண், சிம்ரன், அபூர்வா, மிதுலா, ரியா, சிந்தூரி போன்ற வீரிய ரகங்களும், 295 ஜஸ்பாக்ஸ் ரகங்கள், பெரியகுளம்1 போன்றவை வர்த்தக ரீதியாக தமிழகத்தில் பயிரிட ஏற்றவை.

ஏக்கருக்கு 1.5 கிலோ விதை போதுமானது. தர்ப்பூசணியை அதிக அளவில் தாக்கும் வாடல் நோய், வேர் அழுகல் நோய், திடீர் அழுகல் நோய், சாம்பல் வகை நோய்கள் போன்றவற்றை முற்றிலும் வராமல் தடுக்க விதைப்பதற்கு முன் ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் டிரைக்கோ டெர்மா விரிடி உயிரி பஞ்சாணக் கொல்லியை கலந்து 24 மணி நேரம் கழித்து 10 கிராம் சூடோமோனாஸ் புளூரோசன்ஸ் என்னும் உயிரி பேக்ட்டிரியக் கொல்லியுடன் 400 கிராம் அசோஸ்பைரில்லத்தை ஆறிய அரிசிக் கஞ்சியுடன் கலந்து, நிழலில் உலரவைத்து 2.5 மீட்டர் இடைவெளியில் எடுக்கப்பட்ட வாய்க்கால்களில் 0.9 மீட்டர் இடைவெளியில் ஒரு குழிக்கு 2 விதைகள் வீதம் விதைக்க வேண்டும்.

குழித்தட்டு நாற்றங்காலில் தயாரித்த 12 நாள்களான நாற்றுகளையும் இதே இடைவெளியில் நடலாம். மண்ணின் கார அமிலத்தன்மை 6.5 முதல் 7.5 வரை இருக்க வேண்டும். அடியுரமாக ஏக்கருக்கு 8 டன் தொழுஉரம், 100 கிலோ வேப்பம் பிண்ணாக்கு, 22.5 கிலோ மணிச்சத்து, 22.5 கிலோ சாம்பல் சத்து இட வேண்டும்.

30 நாள் கழித்து மேலுரமாக 22.5 கிலோ தழைச்சத்து இடவேண்டும்.

ரசாயன உரங்களை இடுவதற்கு 15 நாள்களுக்கு முன் ஏக்கருக்கு 1 கிலோ சூடோமோனாஸ் புளூரோசன்ஸ், 1 கிலோ டிரைக்கோ டெர்மாவிரிடி, 1 கிலோ பேசில்லஸ் சப்ட்லிஸ், 4 கிலோ அசோஸ்பைரில்லம், 4 கிலோ பாஸ்போபேக்ட்ரியா, சாம்பல் சத்தை கிரகிக்கும் பொட்டாஷ் மொபைலைசிங்

பேக்ட்ரியா 4 கிலோ போன்ற இயற்கை நுண்ணுயிர் உயிரி மற்றும் நுண்ணுயிர் உரங்களை 50 கிலோ வேப்பம் பிண்ணாக்கு, 100 கிலோ நன்கு மக்கிய தொழுஉரத்துடன் கலந்து கடைசி உழவில் இடவேண்டும். இதனால் தர்ப்பூசணியை தாக்கும் முக்கிய நோய்காரணிகளை முன்கூட்டியே அழித்துவிட முடியும்.தர்ப்பூசணியை நவீன முறையில் சாகுபடி செய்தால் 3 மடங்கு விளைச்சலை பெறலாம். 1.2 மீட்டர் அகலம், 30 செ.மீட்டர் உயரம், 45 செ.மீட்டர் இடைவெளியில் அமைக்கப்பட்ட பார்களின் நடுவில், 60 செ.மீ மற்றும் 50 செ.மீ. இடைவெளியை கொண்ட சொட்டுவான் அமைப்பை உடைய சொட்டு நீர்ப்பாசன கிளைக் குழாய்களை பரப்பி, முதலில் 8 முதல் 12 மணி நேரம் அதை இயக்கி, பார்களை முழுமையாக நனைக்கவேண்டும்.

அதன் பின்னர் குழித்தட்டு நாற்றங்காலில் தயாரிக்கப்பட்ட 12 நாள் வயதான நாற்றுகளை 60 செ.மீ இடைவெளியில் சொட்டு நீர் குழாய்களின் இருமருங்கிலும் நட வேண்டும்.

நவீன தொழில்நுட்பம், பயிர் பாதுகாப்பு போன்றவற்றின் மூலம் ஒரு ஏக்கரில் சராசரியாக 30 டன் முதல் 40 டன் விளைச்சலை 100 முதல் 120 நாளில் பெற முடியும் என்கிறார் ராதாகிருஷ்ணன்.

**பருத்தியில் மகசூல் இழப்பைத் தவிர்க்கும் வழிமுறைகள்...**



பருத்தியில் பூச்சிகள் தாக்குதலைக் கட்டுப்படுத்தும் முறைகளைப் பின்பற்றினால் மகசூல் இழப்பைத் தவிர்க்கலாம் என, தருமபுரி உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் பெ.பாஸ்கர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியது:

தருமபுரி மாவட்டத்தில் நிகழாண்டில் இதுவரை 31,755 ஏக்கர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள குளிர்கால பருத்தி பயிர்கள் பூ, பிஞ்சு உருவாகும் பருவத்தில் உள்ளன.

இளம்பருவம் (விதைத்த 50 நாள்கள் வரை): இந்தப் பருவத்தில் தத்துப்பூச்சி மற்றும் அசுவினி தாக்குதல் தென்படும். தத்துப்பூச்சி தாக்குவதால் பருத்தி இலைகள் மஞ்சள் நிறமாக மாறி ஓரங்கள் மடிவதோடு, இலைகள் உதிரும். அசுவினி தாக்கப்பட்ட பயிர்களின் தளிர் இலைகள் சிறிதாக தோன்றுவதோடு, இலைகள் கிண்ணம் போல் குவியும்.

தத்துப் பூச்சி, அசுவினியின் தாக்குதலைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு மீத்தைல் டெமட்டான் 200 மி.லி. அல்லது வேப்பங்கொட்டைச் சாறு ஐந்து சதம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைத் தெளிக்கலாம்.

பருத்தியில் பூ மற்றும் பிஞ்சுகள் உருவாகி காய் பிடிக்கும் தருணத்தில் காய்ப்புழுக்களின் தாக்குதல் காணப்படும். புள்ளிக்காய்ப்புழு, பச்சை அல்லது அமெரிக்கன் காய்ப்புழு, இளஞ்சிவப்புக் காய்ப்புழு போன்ற மூன்று வகை காய்ப்புழுக்கள் பருத்தி காய்களை தாக்கி பயிருக்கு சேதம் விளைவிக்கும். புள்ளிக்காய்ப் புழுக்கள் பிஞ்சு காய்களை துளைத்தால் அவை செடியிலிருந்து உதிர்ந்து விடும். முற்றுகிற காய்களை குடைந்து உண்டால் உள்ளே இருக்கும் பஞ்சின் தரம், மகசூல் குறையும்.

பச்சை அல்லது அமெரிக்கன் காய்ப்புழு பயிர்கள் பூக்கும், காய்ப்பு பருவத்தில் தாக்குதலை ஏற்படுத்தும். இந்தப் புழுக்கள் காய்களுக்குள் தலையை மட்டும் உள்ளே நுழைத்து பஞ்சு மற்றும் விதைகளை குடைந்து உண்ணும்.

காய் முதிரும் பருவங்கள்: இந்தப் பருவத்தில் இளஞ்சிவப்பு காய்ப்புழுக்கள் பயிரைத் தாக்கும். புழுக்கள் தாக்கப்பட்ட பயிர்களில் மலர அல்லது விரிய வேண்டிய பூக்களின் இதழ்கள் விரியாமல் நுனிகள் ஒன்றுடன் ஒன்று ஒட்டப்பட்டு ரோஜா மலரின் மொட்டுகள் போன்று தோற்றம் அளிக்கும். அவ்வாறு உள்ள

பூக்களைப் பிரித்து பார்த்தால் இளஞ்சிவப்பு காய்ப்புழு, மகரந்தம், சூல்பை ஆகியவற்றை உண்டு சேதப்படுத்தி விடும்.

இதைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு குளோர்பைரிபாஸ் 800 மில்லி அல்லது குயினால்பாஸ் 800 மி.லி., பாசலோன் ஒரு லிட்டர் அளவில் தேவையான தண்ணீருடன் கலந்து தெளிக்கலாம்.

தண்டு மூக்கு வண்டு அல்லது மோதிரப் புழு: இந்தப் புழுக்கள் பருத்தி விதைத்த 25 நாளிலிருந்து 90 நாள்கள் வரை தாக்குதலை ஏற்படுத்துவதோடு, அடித்தண்டில் வீக்கம் காணப்படும். செடிகளின் இடையே களை எடுக்கவோ, உரமிடவோ, நீர் பாய்ச்சும் போதும், பலத்த காற்று அடிக்கும் போதும் தண்டின் வீங்கிய இடத்தில் செடிகள் முறிந்து சேதம் விளைவிக்கும்.

இதைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 12 கிலோ கார்போபியுரான் குருணை மருந்தை செடிகளுக்கு அருகில் இட்டு மண் அணைப்பது அல்லது ஒரு லிட்டர் குளோர்பைரிபாஸ் மருந்தை தேவையான அளவு தண்ணீருடன் கலந்த கரைசலை தண்டுகள் நன்கு நனையும்படி தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

காய் பிடிக்கும் மற்றும் முற்றும் பருவங்கள்: இந்தப் பருவத்தில் புரோடீனியா புழுக்கள் பருத்தியில் தாக்குதல் ஏற்படுத்தும். புழுக்கள் தாக்கிய பயிரின் இலைகள் சல்லடை போல் அறிக்கப்பட்டிருக்கும். இந்தப் புழுக்களைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு குயினால்பாஸ் 800 மில்லி, குனோர்பைரிபாஸ் 800 மில்லி இவற்றில் ஏதேனும் ஒன்றைத் தெளிக்கலாம்.

ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம்: ஒவ்வொரு பூச்சிக்கும் தனித்தனியே நிர்வாகம் செய்வதை விட ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம் செய்வதன் மூலம் பருத்தியை தாக்கும் பூச்சிகளை திறன்பட கட்டுப்படுத்தலாம். எனவே, பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகளை கடைப்பிடித்து பருத்தியில் ஏற்படும் பூச்சி நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பருத்தி விவசாயிகள் சாகுபடி செலவைக் குறைத்து அதிக மகசூல் பெறலாம் என்றார் பாஸ்கர்.

## கால்நடை மருத்துவர்கள் மீது விவசாயிகள் குற்றச்சாட்டு

கோமாரி நோயால் இறக்கும் கால்நடைகளை பிரேத பரிசோதனை செய்ய மருத்துவர்கள் வருவதில்லை என்று மாவட்ட ஆட்சியரிடம் காஞ்சிபுரம் விவசாயிகள் புகார் கூறினர்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது. ஆட்சியர் கா.பாஸ்கரன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சம்பத்குமார், வேளாண் துணை இயக்குநர் செüந்தரராஜன், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் கோவர்த்தனன் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நடந்த விவாதம்:

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் நேரு: மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் கோமாரி நோய் தாக்கி கால்நடைகள் இறந்த வண்ணம் உள்ளன. இது குறித்து கால்நடை மருத்துவர்களிடம் பதிவு செய்திருந்தும் உரிய இழப்பீடு கிடைப்பதில்லை.

கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் கோவர்த்தனன்: கோமாரி நோய் தாக்கி  கால்நடைகள் இறந்ததாக இதுவரை மாவட்டத்தில் பதிவு ஏதும் இல்லை. செப்டம்பர் 15-ஆம் தேதி முதல் அக்டோபர் 28-ஆம் தேதி வரை 4.41 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி 5-ஆம் கட்டமாக போடப்பட்டுள்ளது.

நேரு உள்ளிட்ட விவசாயிகள்: உத்தரமேரூர் தாலுக்கா உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கால்நடைகள் இறப்பு குறித்து பதிவு செய்யப்பட்டுள்ளது. கால்நடைகள் இறந்த பிறகு அந்த பகுதி கால்நடை மருத்துவரிடம் தெரிவித்தால், அவர்கள் பிரேத பரிசோதனைக்கு வருவதில்லை. எனவே மாவட்டத்தில் கோமாரி நோயால் பாதிப்படைந்து இறக்கும் மாடுகளில், கறவை மாடுக்கு ரூ.25 ஆயிரம், சினை மாடுக்கு ரூ.20 ஆயிரம், மற்ற மாடுகளுக்கு ரூ.15 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும்.

முசரவாக்கம் கணேசன்: விவசாயிகள் குறைதீர்க் கூட்டத்தில் விவசாயிகள் கொடுக்கும் மனுக்களின் நகலை வைத்து, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் எங்களை மிரட்டுகின்றனர். மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அதிகாரிகள், இது போன்ற செயலில் ஈடுபட்டு, எங்களுக்குள் பிரச்னையை ஏற்படுத்துகின்றனர்.

ஆட்சியர்: விவசாயிகள் கொடுக்கும் மனுக்கள் மீது நடவடிக்கை எடுப்பதுதான் அதிகாரிகளின் கடமை. இது போன்ற தவறான செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

தாமல் அன்பழன்: தர்பூசணி சீசன் தொடங்க உள்ளது. எனவே நல்ல தரமான தர்பூசணி விதைகள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதிகாரிகள்: தர்பூசணி விதைகள் தொடர்பாக ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. விவசாயிகள் தோட்டக்கலைத்துறை அதிகாரிகளை தொடர்பு கொண்டு விதைகளை பெற்றுக் கொள்ளலாம்.

விவசாயி நேரு: செய்யூர் ஒன்றியம் அகரம், கயநல்லூர் ஆகிய கிராமங்களில் 100 நாள் வேலைத் திட்டத்தில் பயனாளிகளுக்கு ரூ.30 மட்டுமே ஊதியமாக வழங்கப்படுகிறது.  அதுவும் கடந்த 2 மாதங்களாக வழங்கப்படவில்லை.

ஆட்சியர்: இது குறித்து விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

### கிலோ ரூ.2க்கு மானிய விலையில் வைக்கோல்

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள சிறு, குறு விவசாயிகளின் கால்நடைகளுக்கு மானிய விலையில் கிலோ ரூ. 2-க்கு வைக்கோல் வழங்கப்பட உள்ளது.

இது குறித்து, மாவட்ட ஆட்சியர் ந. வெங்கடாசலம் தெரிவித்துள்ளது:

நிகழாண்டு மாவட்டத்தில் போதிய அளவு மழை பெய்யவில்லை. நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விவசாயம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால், கால்நடைகளுக்கு தீவனப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.   அதனைத் தவிர்க்கும்

வகையில், தமிழக அரசு மானிய விலையில் வைக்கோல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதன்படி, சிறு, குறு விவசாயிகளுக்கு கிலோ 2 ரூபாய்க்கு மானிய விலையில் வைக்கோல் வழங்கப்பட உள்ளது. நாளொன்றுக்கு 3 கிலோ வீதம், 5 மாடுகளுக்கு வாரம் ஒருமுறை தொடர்ச்சியாக வைக்கோல் வழங்கப்படும். வைக்கோல் தேவைப்படும் கால்நடை வளர்ப்போர், தங்களின் குடும்ப அட்டையின் நகல், 2 மார்பளவு புகைப்படம், கால்நடைகளின் எண்ணிக்கை ஆகிய விவரங்களை அருகில் உள்ள கால்நடை மருந்தகங்களில் தெரிவிக்கவேண்டும். பின்னர், கால்நடை தீவனம் வழங்கும் அட்டையைப் பெற பதிவு செய்து கொள்ளவேண்டும். இந்தப் பதிவு அட்டை இருந்தால் மட்டுமே மானிய விலையில் வைக்கோல் வழங்கப்படும்.

வத்தலகுண்டு, கோபால்பட்டி, தேவத்தூர், வேடசந்தூர், குஜிலியம்பாறை ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட உள்ள கிட்டங்கியில், 2 முதல் 3 மாதங்கள் வரை மானிய விலையில் வைக்கோல் வழங்கப்படும். இத்திட்டத்துக்காக, தமிழக அரசு ரூ. 50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இது குறித்த கூடுதல் விவரங்களுக்கு, 94450-01114 என்ற எண்ணில் கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இயக்குநரை தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

### இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை (டிச.20) பிற்பகல் 3.30 மணிக்கு, மாவட்ட நிர்வாகம் சார்பில், விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறுகிறது. ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில், விவசாயிகள் , விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டு, தங்களது கோரிக்கைகளை தெரிவித்து தீர்வு காணலாம் என்று, மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

### சிவகங்கையில் இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்

சிவகங்கை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை (டிச.20) நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சியர் வே.ராஜாராமன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் காலை 10.30 மணிக்கு ஆட்சியர் தலைமையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறும். இக்கூட்டத்தில் விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளை தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

### பாசனத்துக்காக பிளவக்கல் அணை திறப்பு

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவில் உள்ள பிளவக்கல் அணை பாசனத்துக்காக முதல்வரின் உத்தரவுப்படி வியாழக்கிழமை திறந்து விடப்பட்டது.

மாவட்ட ஆட்சியர் டி.என். ஹரிஹரன் அணையைத் திறந்து வைத்து பேசுகையில் கூறியதாவது: பிளவக்கல் அணையின் முழு கொள்ளளவு 192 மில்லியன் கன அடி. கோவிலார் அணையின் முழு கொள்ளளவு 133 மில்லியன் கன அடி. தற்போது பிளவக்கல் அணையில் 201.5 மீட்டரும், கோவிலார் அணையில் 202.95 மீட்டரும் நீர் உள்ளது.

அணைக்கு வினாடிக்கு 7.83 கன அடியும், 0.08 கன அடியும் நீர் வந்து கொண்டுள்ளது. இரு அணைகளையும் சேர்த்தோ அல்லது தனித்தனியாகவும் நீர் இருப்பைப் பொறுத்து வினாடிக்கு 150 கன அடி நீர் கண்மாய் பாசனத்திற்காக திறந்து விடப்படும். இதனால் வத்திராயிருப்பு பகுதியில் உள்ள 8 கண்மாய்கள் மூலம் 1167.85 ஹெக்டேர் நிலமும், நேரடி கால்வாய் பாசனம் மூலம் 174.69 ஹெக்டேர் நிலமும் பயன்பெறும்.

தண்ணீரை விவசாயிகள் சிக்கனமாகப் பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என்று ஆட்சியர் கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் வெ. பொன்னுப்பாண்டியன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் தி. நவால்கான் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### பவானிசாகர் அணை நீர்மட்டம் 62.04 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 62.04 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 672 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 400 கன அடி நீரும், வாய்க்காலில் 1,900 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 7.9 டி.எம்.சி.

### மாடுகளை சான்றிதழ்களோடு நீலகிரிக்குள் கொண்டுவர அனுமதிக்கக் கோரிக்கை

நீலகிரி மாவட்டத்தில் இறைச்சிக்காக மாடுகளை உரிய சான்றிதழ்களோடு கொண்டுவர அனுமதிக்க வேண்டுமென, மாட்டிறைச்சி வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக ஆட்சியர் பி.சங்கரிடம், நீலகிரி மாவட்ட மாட்டிறைச்சி வியாபாரிகள் மற்றும் தொழிலாளர்கள் முன்னேற்ற பொதுநல சங்கத்தின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள கோரிக்கை மனு:

நீலகிரி மாவட்டத்தில் சுமார் 2,000 குடும்பங்கள் மாட்டிறைச்சித் தொழிலை சார்ந்து, தங்களது வாழ்வாதாரத்தை அமைத்துக் கொண்டுள்ளன. இறைச்சிக்கான மாடுகள் சமவெளி மாவட்டங்களிலிருந்துதான் வாகனங்களில் நீலகிரிக்கு கொண்டு வரப்படுகின்றன. ஆனால், கடந்த நவம்பர் மாதம் முதல் கால்நடைகளை ஏற்றிக் கொண்டு வரும் வாகனங்களை சோதனை சாவடிகளில் அனுமதிப்பதில்லை. எனவே, மாட்டிறைச்சி தொழிலை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். தொழிலை தடங்கலின்றி நடத்தவும், சமவெளி மாவட்டங்களிலிருந்து மாடுகளை வாகனத்தில் ஏற்றி வர அனுமதிக்க வேண்டும்.

இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இத்தொழிலைத் தவிர வேறு எந்தத் தொழிலும் தெரியாது என்பதால், இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் நிலையை கருத்தில் கொண்டு, மாடுகளை சமவெளிப் பகுதிகளிலிருந்து மருத்துவ சான்றிதழ்களோடு கொண்டு வரவும் அனுமதிக்க வேண்டுமென தெரிவித்துள்ளனர்.

### விவசாயிகள் 3 நாள் வேளாண் சுற்றுலா

செய்யாறு வட்டார விவசாயிகள் வேளாண் சுற்றுலாவாக மூன்று நாள்கள் கோயம்புத்தூர் சென்று வந்தனர்.

கொடிசியா பகுதியில் நடைபெற்ற வாழைத் திருவிழாவை தொடங்கி வைத்த வேளாண்மைத் துறை அமைச்சர் எஸ்.தாமோதரன், முன்னோடி விவசாயிகளாக திகழவேண்டும் என விவசாயிகளைக் கேட்டுக் கொண்டார்.

வேளாண் திருவிழாவில் திருவண்ணாமலை மாவட்டத்தில் இருந்து வட்டாரத்துக்கு 5 பேர் வீதம் 20 வட்டாரங்களில் இருந்து 100 முன்னோடி விவசாயிகள் இலவசமாக இந்த சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

செய்யாறு வேளாண்மை உதவி இயக்குநர் க.செல்வராஜ், வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர்கள் தமிழ்செல்வி, பாலவித்யா ஆகியோர் வேளாண் சுற்றுலாவுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

### மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது

காவிரி ஆற்றின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்யாததால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வியாழக்கிழமை நொடிக்கு 659 கன அடியாகக் குறைந்தது.

கர்நாடக மாநிலத்தில், காவிரி ஆற்றின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால், கடந்த இரு வாரங்களாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாகக் குறைந்து வந்தது.

புதன்கிழமை காலை மேட்டூர் அணைக்கு நொடிக்கு 1,343 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இந்த நிலையில், வியாழக்கிழமை காலை நீர்வரத்து நொடிக்கு 659 கன அடியாகக் குறைந்தது.

மேலும், அணையிலிருந்து நொடிக்கு 1,343 கன அடி வீதம் காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

அணையின் நீர் இருப்பு 39.24 டி.எம்.சி.யாகவும்,

நீர்மட்டம் 77.22 அடியாகவும் இருந்தது. மேட்டூர் அணைக்கு நீர்வரத்து சரிந்த நிலையில், தொடர்ந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்படுவதால், அணையின் நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வருகிறது.

### விவசாயிகளுக்கு ராபி பருவப் பயிற்சி

வெண்ணந்தூர் வட்டம், குட்டலாடம்பட்டி கிராமத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்ட சிறுதானிய இயக்கத்தின் கீழ், 30 விவசாயிகளுக்கு ராபி பருவப் பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சியில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கே.தமிழ்ச்செல்வன் பேசியது: விவசாயிகள் முன்னோடி தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்க வேண்டும். இதன்மூலம், வருமானத்தை மும்மடங்காக்க வேண்டும் என்றார் அவர்.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கிருஷ்ணகுமார் பேசியது: விவசாயிகள் வேளாண்மைத் துறையோடு இணைந்து பண்ணைக்குட்டை, மண் மாதிரியைக் கொடுத்து மண் வள அட்டை பெறுதல், உணவு தானிய இயக்கம் போன்ற பல்வேறுத் திட்டங்களில் சேர்ந்து பயனடைய வேண்டும் என்றார்.

இந்தப் பயிற்சியில் சிறுதானியப் பயிர்களுக்கு விதை நேர்த்தி செய்து காண்பிக்கப்பட்டது. மேலும், சிறுதானிய உற்பத்தியைப் பெருக்க உதவும் முறை குறித்து குறுந்தகட்டின் வாயிலாகத் திரையிடப்பட்டது. வேளாண்மைத் துறையில் உள்ள திட்டங்களை துணை வேளாண்மை அலுவலர், பசுபதி, தோட்டக்கலை துறை திட்டங்கள் குறித்து துணை வேளாண்மை அலுவலர் சண்முகம், வேளாண்மை விற்பனைத் துறை திட்டங்கள் குறித்து உதவி வேளாண்மை அலுவலர் முருகேசன் ஆகியோர் எடுத்துக் கூறினர்.

விரிவான கருத்துக் காட்சி ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. பயிற்சியின் முடிவில், வந்திருந்த விவசாயிகள் அனைவருக்கும் இடுபொருள்கள் வழங்கப்பட்டன.

பயிற்சி ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் மேகலா, அந்தோனிசாமி, ஆரோக்கியசாமி, கருப்புசாமி, அட்மா திட்ட அலுவலர் ஜமுனாராணி ஆகியோர் செய்திருந்தனர்.

முன்னதாக, இந்தப் பயிற்சிக்கு வந்திருந்த அனைவரையும் வெண்ணந்தூர் உதவி வேளாண்மை இயக்குநர் கு.சீனிவாசன் வரவேற்றார். இதில், அட்மா தலைவர் எஸ்.பி.தாமோதரன், குட்டலாடம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் ரமேஷ்குமார், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சுந்தரம், வெண்ணந்தூர் ஒன்றியத் துணைத் தலைவர் மணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### பருத்தி வரத்து அதிகரிப்பு: ரூ.60 லட்சத்துக்கு ஏலம்

நாமக்கல்லில் வியாழக்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்துக்கு வரத்து அதிகளவில் இருந்ததால், பருத்தி மூட்டைகள் ரூ.60 லட்சத்துக்கு ஏலம் விடப்பட்டன.

நாமக்கல் திருச்செங்கோடு சாலையிலுள்ள கூட்டுறவு வேளாண் விற்பனை நிலையத்தில் வாரம் தோறும் வியாழக்கிழமை பருத்தி ஏலம் நடைபெறுகிறது. இந்த ஏலத்துக்கு நாமக்கல் மாவட்டம் மட்டுமின்றி, பெரம்பலூர், துறையூர், சேலம், ஆத்தூர் பகுதிகளில் இருந்தும் விவசாயிகள் பருத்தி மூட்டைகளைக் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். அறுவடை சீசன் தொடங்கியிருப்பதால், கடந்த சில வாரங்களாக பருத்தி மூட்டை வரத்து அதிகரித்து வருகிறது.

இதன்படி, வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு 3,500 பருத்தி மூட்டைகள் கொண்டு வரப்பட்டிருந்தன. இதில், ஆர்சிஹெச் ரகம் குவிண்டால் ரூ.4,401 முதல் ரூ.5,030 வரையும், டிசிஹெச் ரகம் ரூ.6,505 முதல் ரூ.7,030 வரையும் ஏலம் போனது. இதன்படி, மொத்த பருத்தி மூட்டைகளும் ரூ.60 லட்சத்துக்கு விற்பனை செய்யப்பட்டதாக கூட்டுறவுத் துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

கடந்த வாரம் (டிச.12) நடைபெற்ற ஏலத்தில் ஆர்சிஹெச் ரகம் குவிண்டால் ரூ.4,260 முதல் ரூ.4,990 வரையும், டிசிஹெச் ரகம் ரூ.6,500 முதல் ரூ.6,906

வரையும் என, மொத்த பருத்தி மூட்டைகளும் ரூ.40 லட்சத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. தொடர்ந்து, அடுத்த வாரம் இதை விட அதிகளவில் பருத்தி மூட்டைகள் விற்பனைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண்மை தகவல் மையம் தொடக்கம்**

சூளகிரி வட்டம், திருச்சிப்பள்ளி, பேரண்டபப்பள்ளி கிராமங்களில் நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ், வேளாண்மைத் துறையில் ஒருங்கிணைந்த திட்டங்களைச் செயல்படுத்தும் வகையில், ஒற்றை சாளரத் தகவல், அறிவு மையத்தை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ராதாகிருஷ்ணன் புதன்கிழமை தொடக்கிவைத்தார்.

நிகழ்ச்சியில் அவர் பேசியது:

இந்த மையத்தின் மூலம் வேளாண் சாகுபடிக்கு பயன்படாத தரிசு நிலங்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும்.

இதனால், சாகுபடி பரப்பளவு அதிகமாவதுடன், தமிழக முதல்வரின் இரண்டு மடங்கு உற்பத்தி, மூன்று மடங்கு வருமானம் என்ற குறிக்கோளுக்கு ஏற்ப அனைத்துத் துறை அலுவலர்களும் இந்த மையத்திலிருந்து விவசாயிகளின் குறைகளைக் கேட்டறிந்து உடனுக்குடன் திட்டங்களை விரைந்து முடிக்க முடியும் என்றார் அவர். இதில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் சுமதி, மாவட்டக் குழு உறுப்பினர் ரங்கநாத், ஊராட்சி மன்றத் தலைவர் சியாமளா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையம்: மதிமுக வலியுறுத்தல்**

தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என மதிமுக வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து மதிமுக மாவட்டச் செயலர் எஸ். ஜோயல் வெளியிட்ட அறிக்கை:

தூத்துக்குடி மாவட்டத்தில் உடன்குடி, திருச்செந்தூர், குரும்பூர், குறிப்பன்குளம் பகுதிகளில் தென்னை மரங்கள் அதிகளவில் வளர்க்கப்பட்டு வருகின்றன. இப்

பகுதிகளில் நிலத்தடி நீர் உறிஞ்சப்படுவதால் தென்னை விவசாயம் பாதிக்கப்பட்டு வருகிறது.

இங்குள்ள தென்னை விவசாயிகள் பயன்பெறும் வகையில், உடன்குடியில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று, முன்னாள் மாவட்ட ஆட்சியர் ஆஷிஷ்குமார் அதற்கான நடவடிக்கை எடுக்கும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். ஆனால், வேளாண் துறை அதிகாரிகளின் அலட்சியத்தால் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளபடவில்லை.

எனவே, மாவட்ட ஆட்சியர் இந்த விவகாரத்தில் தலையிட்டு, உடன்குடியில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## இரு மாதங்களுக்கு முன் 100 ரூபாய் : இப்போது வெங்காயம் கிலோ ரூ.7

நாசிக் : கடந்த, அக்டோபர், நவம்பர் மாதங்களில், 1 கிலோ வெங்காயம், ??? ரூபாயை தாண்டி விற்ற நிலையில், மொத்த விலை சந்தையில், இப்போது, 1 கிலோ, 7 ரூபாய்க்குத் தான் விற்கப்படுகிறது.

வட மாநிலங்களில் சட்டசபை தேர்தல் நடந்தால், வெங்காய விலை உயர்ந்து விடும் போக்கு, சமீப காலமாக காணப்படுகிறது. கடந்த நவம்பர் மற்றும் இந்த மாத துவக்கத்தில், நான்கு, வட மாநிலங்களில் சட்டசபை தேர்தல் நடந்தது. அதற்கு, இரு மாதங்களுக்கு முன், அதாவது,

அக்டோபர், நவம்பர் மாதங்களில், வெங்காய விலை உச்சத்தை தொட்டது. கிலோ, 20 - 40 ரூபாய் அளவில் இருந்த வெங்காயம், இந்த காலகட்டத்தில், ??? ரூபாயை தாண்டி விற்றது. இதனால், தேர்தல் பிரசாரத்தில், வெங்காய விலை முக்கிய இடத்தைப் பிடித்து, ஆளும் அரசுகளுக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில், கடந்த, இரு வாரங்களாக, மகாராஷ்டிர மாநிலம், நாசிக் நகரின், மொத்த விலை சந்தையில், வெங்காய விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்தது. 100 கிலோ, 700 ரூபாய்க்கும் குறைவாக விற்கப்பட்டது. இதனால், விவசாயிகள் கடும் பாதிப்பு அடைந்துள்ளனர். ஆனால், சில்லரை விலையில், 1 கிலோ, 50 - 60 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இதனால் அதிருப்தி அடைந்த விவசாயிகள், நேற்று முன்தினம், மும்பை - ஆக்ரா தேசிய நெடுஞ்சாலையில், சாலை மறியல் செய்து, பல மணி நேரம் போக்குவரத்தை தடை செய்தனர். இது குறித்து, வெங்காய விவசாயிகள் கூறும் போது, எங்களுக்கு, கிலோவுக்கு, 7 ரூபாய் கொடுக்கின்றனர். ஆனால், சில்லரை விலையில், 50 ரூபாய்க்கு மேல் விற்கின்றனர். இதெல்லாம், அரசியல் சூழ்ச்சி. இடைத்தரகர்களுடன், மொத்த வியாபாரிகள் சேர்ந்து, கூட்டுக்கொள்ளை அடிக்கின்றனர் என்றனர்.

## "23 நாட்களாக கால்நடைகள் இறப்பு இல்லை'

ஈரோடு: ""கோமாரி நோய் தாக்குதல், முழுவதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது; கடந்த, 23 நாட்களாக கால்நடைகள் இறப்பு, ஈரோடு மாவட்டத்தில் இல்லை,'' என, கால்நடை பராமரிப்பு துணை இயக்குனர் டாக்டர் பிரகாஷம் தெரிவித்தார். தமிழகத்தில் கோமாரி நோய் தாக்குதலால், பல நூறு கால்நடைகள் இறந்தன. இதனால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். ஈரோடு மாவட்டத்தில் கால்நடை பராமரிப்பு துறை சார்பில், 3.50 லட்சம் தடுப்பூசி போடப்பட்டது. இருந்தும், பல நூறு மாடுகள் இறந்தன.

இந்நிலையில், ஈரோடு மாவட்டத்தில், "ஆவின்' நிறுவனம் சார்பில்,

கிராமப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள, 800க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் மூலம், 37 ஆயிரம் உறுப்பினர்களின் கால்நடைகளுக்கும், பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. தடுப்பூசி போடுதல், சிகிச்சை வழங்குதல் போன்றவற்றில் ஈடுபட்டனர். பிற மாவட்டம், மாநிலங்களில் இருந்து மாடுகள் கொண்டு வர தடை விதிக்கப்பட்டது. இதனால், நோய் பாதிப்பு படிப்படியாக குறைந்தது.

கால்நடை பராமரிப்பு துறை துணை இயக்குனர் டாக்டர் பிரகாஷம் கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில், கோமாரி தாக்குதல், குறைந்து விட்டது. 23 நாட்களாக கால்நடைகள் இறப்பே இல்லை. மருத்துவர்கள், வீடு வீடாக சென்று, கால்நடைகளுக்கு தடுப்பூசியும், மருந்தும் கொடுத்து வருகின்றனர். இவ்வாறு, பிரகாஷம் கூறினார்.

கருகுது! மூடுபனியால் கருணை செடிகள் விலை உயர்வு... வரத்து சரிவு...

அலங்காநல்லூர்:மதுரையில் நிலவும் மூடுபனியால் கருணைக்கிழங்கின் இலைகள் கருகி வருகின்றன. போதுமான விலை இருந்தும் வரத்து இல்லாததால், விவசாயிகள் கவலையில் உள்ளனர்.அலங்காநல்லூர், பாலமேடு, கோணப்பட்டி, எர்ரம்பட்டி, உசிலம்பட்டி, எழுமலை உள்ளிட்ட பகுதிகளில், 700 எக்டேர் பரப்பளவில் கருணை மற்றும் சேனைக்கிழங்கு பயிரிடப்பட்டுள்ளது. இவ்வகைகளை சில ஆண்டுகளாக மழை இல்லாததால் பயிரிடவில்லை. ஜூலை இறுதி முதல் நவம்பர் இரண்டாவது வாரம் வரை அவ்வப்போது பெய்த மழையால் நீர்நிலைகள் நிரம்பின. இதையடுத்து, கருணை, சேனைக்கிழங்கை விளைவிக்க விவசாயிகள் ஆர்வம் காட்டினர்.

கிணற்றுப்பாசனம் மூலம் கருணையை பயிரிட்டதில் நல்ல விளைச்சல் இருந்தது. நவ., முதல் பனிப்பொழிவு அதிகம் இருப்பதால், கருணையில் இலைகள் கருகத்

துவங்கின. மேல்மட்ட இலைகள் சுருங்கி காய்ந்து விடுகிறது. இதனால் பால் பிடித்த பிஞ்சு கிழங்குகள் பெருக்காமல் வெம்பி வருகின்றன.

இலைகள் கருகுவதால் செடியின் தண்டுப்பகுதியும் சத்து இல்லாமல் ஒடிகிறது. நடவு செய்து, சொட்டுநீர் பாசன முறையில் தண்ணீர் பாய்ச்சி, களை எடுத்து, பக்குவமாக பார்த்து வளர்த்த கருணை செடிகள் கருகுவதால் விவசாயிகள் கண்ணீர் வடிக்கின்றனர்.

விவசாயி சத்யா, ""அலங்காநல்லூர் அருகே ராமேஸ்வரத்தில் ஒரு ஏக்கரில் கருணை பயிரிட்டோம். 2012ல் கிழங்கு நல்ல விளைச்சலை கண்டது. இதனால், 80 கிலோ மூடை ரூ.900 வரை விலை போனது. இந்தாண்டு ரூ.2200 வரை விலை போகிறது. ஆனால், விளைச்சல் இல்லை. கடும் மூடுபனியால் கருணையில் இலைகள் கருகுகின்றன. பனி மூட்டத்தை கட்டுப்படுத்த இயலாது. கருகிய இலைகளை தோட்டக்கலைத்துறையினர் பார்வையிட வரவில்லை. விவசாயிகளுக்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்ட அரசு உதவ வேண்டும்," என்றார்.

**மாட்டுச்சந்தைகளை திறக்க வலியுறுத்திவரும் 23ல் உண்ணாவிரத போராட்டம்**

பொள்ளாச்சி:"தமிழகம் முழுவதும் 50 நாட்களுக்கு மேல் மூடிக்கிடக்கும் மாட்டுச் சந்தைகளை உடனே திறக்க வேண்டும் என வலியுறுத்தி, பொள்ளாச்சியில் வரும் 23ம் தேதி உண்ணாவிரத போராட்டம் நடைபெறுகிறது.தமிழகத்தில் பொள்ளாச்சி மாட்டுச்சந்தை மிகவும் சிறப்பு வாய்ந்தது. வாரம்ந்தோறும் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் மாட்டுச்சந்தை கூடுகிறது. ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட வெளிமாநிலங்கள்; தஞ்சாவூர், கும்பகோணம், ஒட்டன்சத்திரம், ஈரோடு, திருப்பூர், சேலம், திருவண்ணாமலை, விழுப்புரம், திண்டிவணம் உள்ளிட்ட வெளி நகரங்களில் இருந்து பல்வேறு ரகங்களை சேர்ந்த மாடுகள் விற்பனைக்கு வருகின்றன.மாட்டுச்சந்தையில் செவ்வாய்கிழமையில் நான்காயிரத்துக்கு மேற்பட்ட மாடுகள்; வியாழக்கிழமைகளில்,இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மாடுகளும் விற்பனைக்கு வருகின்றன. பொள்ளாச்சி சந்தையில் இருந்து

பெரும்பாலும் கேரளாவிற்கு மாடுகள், வளர்ப்பு மற்றும் இறைச்சிக்காக கொண்டு செல்லப்படுகின்றன. மேலும், தமிழகத்தின் பல்வேறு பகுதி களுக்கும் மாடுகள் வாங்கி செல்லப்படுகின்றன. இந்தச்சந்தையில், வாரம்தோறும் 10 கோடிக்கு மேல் வர்த்தகம் நடந்து வந்தது.இந்நிலையில், கடந்த மாதத்தில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்கியது. இதனால், கால்நடைகள் ஆங்காங்கே இறந்து விழுந்தன. இந்த நோய் பரவுவதை தடுக்கும் விதத்தில், தமிழகத்தில் உள்ள மாட்டுச்சந்தைகள் செயல்பட தடை விதிக்கப் பட்டது. இந்த தடையால், மாட்டுச்சந்தைகள் வெறிச்சோடி காணப்பட்டன. கடந்த 50 நாட்களுக்கும் மேலாக சந்தை மூடப்பட்டுள்ளதால், வர்த்தகம் பாதிக்கப்பட்டது. இந்நிலையில், பொள்ளாச்சி மாட்டுச்சந்தையில், தமிழ்நாடு மாட்டு வியாபாரிகள் மற்றும் தொழிலாளர்கள் பாதுகாப்பு சங்கம், மாடு ஓட்டும் லாரி உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் சங்கம், மாட்டிறைச்சி வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது.தமிழ்நாடு மாட்டு வியாபாரிகள் மற்றும் தொழிலாளர் பாதுகாப்பு சங்க பொருளாளர் செல்வராஜ் தலைமை வகித்தார். மாநில செயலாளர் செல்வராஜ் முன்னிலை வகித்தார்.கூட்டத்தில், "தமிழகம் முழுவதும் 50 நாட்களுக்கு மேல் மூடிக்கிடக்கும் மாட்டுச்சந்தைகளை உடனே திறக்க வேண்டும்;லாரிகளில் 20 மாடுகளுக்கு மேல் ஏற்றிச் செல்ல அனுமதி வேண்டியும், முறையாக மருத்துவச்சான்றிதழுடன் ஏற்றி வரும் லாரிகளை அனுமதிக்க கோரியும், உண்ணாவிரத போராட்டம் வரும் 23ம் தேதி நடைபெறுகிறது. பொள்ளாச்சி திருவள்ளுவர் திடலில், காலை 8:00 மணி முதல் மாலை 6:00 மணி வரை உண்ணாவிரத போராட்டம் தமிழ்நாடு மாட்டு வியாபாரிகள் மற்றும் தொழிலாளர்கள் பாதுகாப்பு சங்க தலைவர் ராமசாமி தலைமையில் நடத்தப்படும் என தீர்மானிக்கப்பட்டது.

பட்டுக்கூடு விலை சரிய வாய்ப்பில்லைதிட்டவட்டம்!விற்பனை சந்தைக்கும் விரைவில் தீர்வு

உடுமலை:வெண்பட்டுக்கூடுகளுக்கு நிலையான விலை கிடைக்க, இறக்குமதி வரியை அதிகரித்தல் மற்றும் விற்பனைச்சந்தை பிரச்னைக்கு "ஆட்டோமெட்டிக் ரீலிங் யூனிட்' களை செயல்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால், விலை சரிய வாய்ப்பில்லை என பட்டு வளர்ச்சித்துறையினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

உடுமலை, பொள்ளாச்சி சுற்றுப்பகுதிகளில், வெண்பட்டுக்கூடுகள் வளர்ப்பிற்கு, 3,944 ஏக்கரில், மல்பெரி பயிரிட்டு, 2 ஆயிரத்திற்கும் அதிகமான விவசாயிகள் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். மாநிலத்தில், வெண்பட்டுக்கூடுகள் உற்பத்தியில் உடுமலை பகுதி முன்னிலை வகிக்கிறது. இத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், தொழில் மேம்பாட்டிற்கு இரு முக்கிய பிரச்னைகளை பல ஆண்டுகளாக தெரிவித்து வருகின்றனர்.

சீரான விலை:நம் நாட்டில், பட்டுத்துணிகள் உற்பத்திக்கு தேவையான கச்சாப்பட்டு உற்பத்தி செய்யப்படுவதில் லை. இதனால், சீனாவிலிருந்து கச்சாப்பட்டு இறக்குமதி செய்யப்படுகிறது. உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், கடந்த சில ஆண்டுகளுக்கு முன் வரை, கச்சாப்பட்டு இறக்குமதிக்கு, இறக்குமதி வரி 33 சதவீதம் வரை விதிக்கப்பட்டிருந்தது.கடந்த 2011ம் ஆண்டு இறக்குமதி வரி குறைக்கப்பட்டது.

இதனால், அதிகளவு கச்சாப்பட்டு சீனாவிலிருந்து குவிக்கப்பட்டு, உள்நாட்டில், வெண்பட்டுக்கூடுகள் விலை கிலோவுக்கு 250 ரூபாய் என்றளவில் சரிந்தது. பின்னர், இறக்குமதி வரி மீண்டும் உயர்த்தப்பட்டது. வெண்பட்டுக்கூடுகளுக்கு சீரான விலை கிடைக்க, இறக்குமதி வரியை குறைக்கக்கூடாது என விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

சமீபத்தில், மத்திய பட்டு வாரியம் சார்பில், இறக்குமதி வரியை 25 சதவீதமாக நிலையாக வைத்திருக்க வேண்டும் என மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பபப்பட்டுள்ளது. இது குறித்து நடவடிக்கை எடுப்பதாக மத்திய அரசு உறுதியளித்துள்ளது. எனவே, வெண்பட்டுக்
கூடுகள் விலை நிலையாக இருக்கும் என பட்டு வளர்ச்சித்துறையினர் தெரிவித்துள்ளனர்.

விற்பனைச்சந்தை:வெண்பட்டுக்கூடுகள் உற்பத்தியில் முன்னிலை வகித்தாலும், உடுமலை பகுதியில், பட்டுக்கூடுகள் கொள்முதல் மையம் இல்லை. கர்நாடகா மாநிலத்திற்கு கூடுகளை கொண்டு செல்லும் போது, பல்வேறு பிரச்னைகளை சந்தித்து வருவதாக விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர். இப்பிரச்னைக்கு தீர்வாக, மத்திய பட்டு வாரிய மானியத்துடன் துவங்கப்பட்ட "ஆட்டோமெட்டிக் ரீலிங் யூனிட்' கள் முழு உற்பத்தியை மேற்கொள்ள பல்வேறு பணிகள் துவங்கப்பட்டுள்ளன.
பல்லடம் பகுதியில், துவங்கப்பட்ட "ஆட்டோமெட்டிக் ரீலிங் யூனிட்'டில் குறுகிய நாட்களில் உற்பத்தி நிறுத்தப்பட்டது. இந்த தொழிற்சாலையை இயக்க, மத்திய பட்டு வாரியம் மற்றும் பட்டு வளர்ச்சித்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இந்த தொழிற்சாலை இயங்கினால், நாள்தோறும் 2 ஆயிரம் கிலோ வரை வெண்பட்டுக்கூடுகள் தேவைப்படும். இந்த கூடுகளை உடுமலை பகுதியிலேயே, தொழிற்சாலை நிர்வாகத்தினர் கொள்முதல் செய்வார்கள். இதனால், நீண்ட நாட்களாக நீடித்து வரும் விற்பனைச்சந்தை பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என பட்டு வளர்ச்சித்துறையினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இளைஞர்களுக்கு வாய்ப்பு:வெண்பட்டுக்கூடுகளிலிருந்து, பட்டு நூலிழை யை பிரித்தெடுக்கும் "பேசின்' இயந்திரங்களை இயக்க, மத்திய பட்டு வாரியம் மற்றும் பட்டு வளர்ச்சித்துறை சார்பில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த இயந்திரங்களை

வாங்க, பல்வேறு மானியங்களும் வழங்கப்படுகிறது. ஆர்வமுள்ள இளைஞர்கள், பட்டு வளர்ச்சித்துறையை
அணுகலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### துவரை சாகுபடி வயலைவேளாண் அதிகாரி ஆய்வு

திருவெண்ணெய்நல்லூர்: திருவெண்ணெய்நல்லூர் அருகே துவரை சாகுபடி வயலில் வேளாண் அதிகாரி ஆய்வு செய்தார்.திருவெண்ணெய்நல்லூர் வட்டாரத்தில் 25 எக்டேரில் துவரை சாகுபடி செய்யப்படுகிறது. இதில் பருகம்பட்டு, ஆணைவாரி பெரியசெவலை, சிறுமதுரை உள்பட பல கிராமங்களில் சொட்டு நீர் பாசனம் மூலம் துவரை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
இதனை வேளாண் துணை இயக்குனர் ரத்தினசபாபதி பார்வையிட்டு விவசாயிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினார். சொட்டு நீர் பாசனத்திற்கு அரசு வழங்கும் மானிய சலுகைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. வேளாண் உதவி இயக்குனர் இளவரசன், உதவி வேளாண் அலுவலர்கள் ஜவகர், ராஜேஷ், ரவிச்சந்திரன், சுதர்சனம் உடனிருந்தனர்.

### செங்கரும்பு பயிரிடும் பரப்பு குறைந்ததால் விலை...கிடுகிடு! பெங்களூரு வியாபாரிகள் வருகைக்காக காத்திருப்பு

சேலம்: தமிழகத்தில், கடந்த ஆண்டு நிலவிய வறட்சியின் காரணமாக, செங்கரும்பு விளைச்சல் குறைந்துள்ளதால், விலை உயர்ந்துள்ளது. சேலம் மாவட்டத்தில் குறைந்த அளவில் பயிரிடப்பட்டுள்ள செங்கரும்பு, பெங்களூரு வியாபாரிகளின் வருகையை எதிர்பார்த்து காத்திருக்கின்றன.
தமிழகத்தில் கடந்த ஆண்டு, தென் மேற்கு பருவமழை, வடகிழக்கு பருவ மழை எதிர்பார்த்த அளவு இல்லாததால் கடும் வறட்சி நிலவியது. செங்கரும்பு அதிக அளவில் பயிரிடப்படும், கம்பம், தேனி, தஞ்சாவூர், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில், நீர் நிலைகளில் போதிய அளவு தண்ணீர் இல்லாததால், விவசாய பணிகளில் கடும் பாதிப்பு ஏற்பட்டது. பொங்கல் பண்டிகையை எதிர்பார்த்து

பயிரிடப்படும் செங்கரும்பில், விவசாயிகள் அதிக அளவில் ஆர்வம் காட்டவில்லை. தமிழகத்தில், கடந்த ஆண்டை ஒப்பிடுகையில், செங்கரும்பின் பயிரிடும் பரப்பளவு, 50 சதவீதம் அளவுக்கு குறைந்து உள்ளது.

சேலம் மாவட்டத்தில் சித்தர்கோவில், பெருமாம்பட்டி, முருகப்பட்டி, இளம்பிள்ளை, வாழப்பாடி பகுதிகளில் அதிக அளவு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு செங்கரும்பு பயிரிடப்படுவது வழக்கம். ஆனால், கடந்த ஆண்டு நிலவிய வறட்சியின் காரணமாக குறைந்த அளவிலேயே செங்கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. தற்போது இந்த பகுதிகளில் செங்கரும்பு அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. வழக்கமாக இந்த பகுதிகளில் விளையும் செங்கரும்புகளை பெங்களூரு, மதுரை, திருநெல்வேலி, சென்னை வியாபாரிகளே அதிக அளவு வாங்கிச் செல்வது வழக்கம். ஆனால், நடப்பாண்டு செங்கரும்பின் விலை உயர்ந்ததால், வியாபாரிகள் கரும்பு தோட்டங்களை குத்தகைக்கு எடுக்க தயக்கம் காட்டி வருகின்றனர். பொங்கல் பண்டிகை, வெளியூர் வியாபாரிகளின் வருகையை எதிர்பார்த்து, சேலம் மாவட்ட விவசாயிகள் செங்கரும்புகளை அறுவடை செய்யாமல் காத்து இருக்கின்றனர். கடந்த ஆண்டு, டிசம்பர் கடைசி வாரத்தில், முதல் ரக கரும்பு ஒன்று, 15 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம், 10 ரூபாய்க்கும், 20 கரும்புகளை கொண்ட கட்டு, முதல் ரகம், 300 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம், 200 ரூபாய்க்கும், 30 கட்டுக்களை கொண்ட ஒரு லோடு, 5,000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. அதுவே தற்போது முதல் ரகம், 30 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம், 20 ரூபாய்க்கும், கட்டு முதல் ரகம், 600 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம், 400 ரூபாய்க்கும், லோடு கரும்பு, 10,000 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. பொங்கல் பண்டிகை நெருங்கும் நிலையில், செங்கரும்பின் விலை மேலும் உயரும் என விவசாயிகள் தெரிவித்தனர். சித்தர்கோவிலை சேர்ந்த செங்கரும்பு மொத்த வியாபாரி சுரேஷ் கூறியதாவது: கடந்த ஆண்டு பொங்கல் பண்டிகையின் போது, சித்தர் கோவில் பகுதியில் அதிக அளவில் செங்கரும்பு பயிரிடப்பட்டு இருந்ததால், பெங்களூரு, சென்னை வியாபாரிகளின் வருகை அதிகரித்தது. டிசம்பர், மூன்றாவது வாரமே அறுவடை துவங்கியது.

ஆனால், நடப்பாண்டு விளைச்சல் பாதித்துள்ள நிலையில், வெளியூர்

வியாபாரிகளின் வருகையும் எதிர்பார்த்த அளவு இல்லை. விளைச்சல் பாதிப்பால் விலை உயர்ந்துள்ளது. இந்த விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

### தர்மபுரியில் நெல் விளைச்சல்...அதிகரிப்பு பரிசுகளுடன் அரிசி விற்பனை

தர்மபுரி: நெல் விளைச்சல் அதிகரித்துள்ளதை அடுத்து, பரிசு பொருட்களுடன் அரிசி விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் கடந்தாண்டு போதிய பருவமழையில்லாதாதல் நெல் சாகுபடி பெருமளவு பாதிக்கப்பட்டு வந்தது. இதனால், மாநிலத்தில் அரிசி விலை கடுமையாக உயர்ந்தது. நடுத்தர மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வந்தனர். தொடர்ந்து ஏறிவரும் விலையை அடுத்து, அரிசி வியாபாரிகள், வெளிமாநிலங்களில் இருந்து அரிசியை அதிகளவு கொள்முதல் செய்து பதுக்கி வந்தனர்.

இந்நிலையில், இந்தாண்டு தென்மேற்கு பருவமழை கர்நாடகா மாநிலத்தில் அதிகளவில் பெய்தது காரணமாக மேட்டூர் அணைக்கு போதிய தண்ணீர் வந்தது. இதே போல், மேற்கு மண்டலங்களிலும், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் தென்மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழை ஓரளவுக்கு கை கொடுத்தது.

இதையடுத்து, தமிழகத்தில் நெல் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டது. குறிப்பாக டெல்டா மாவட்டங்களான திருச்சி, தஞ்சவூர், திருவாரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் சம்பா சாகுபடியில், நெல் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டது. இதே போல், தர்மபுரி மாவட்டத்தில், 20 ஏக்கருக்கு மேல் நெல் சாகுபடி செய்யப்பட்டதுடன், நெல் விளைச்சலும் அதிகரித்துள்ளது. தமிழகத்தில் கடந்த சில தினங்களாக நெல் அறுவடை துவங்கியுள்ளது. நெல் விளைச்சல் அதிகரித்துள்ளதை அடுத்து விவசாயிகளிடம் இருந்து வியாபாரிகள், ஒரு கிலோ

நெல், 18 ரூபாய் முதல் கொள்முதல் செய்து வருகின்றனர். இதனால், தமிழகத்தில் அரிசி விலை குறைய கூடிய நிலை ஏற்பட்டதால் அதிர்சி அடைந்த அரிசி வியாபாரிகள் தாங்கள் பதுக்கி வைத்துள்ள அரிசியை மளிகை கடைகாரர்களிடம் சலுகை விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

இவர்களிடம் சலுகை விலையில், அரிசையை பெறும் மற்றும் மொத்த விற்பனை கடைகார்கள், டிப்பார்ட்மென்ட் ஸ்டோர் உரிமையாளர்கள், மளிகைகடைக்காரர்கள் கடந்த சில தினங்களாக அரிசி மூட்டைகளை பரிசு பொருட்களுடன் வழங்கி வருகின்றனர். தர்மபுரி நகரில் உள்ள பல கடைகளில், 25 கிலோ கொண்ட, ஒரு அரிசி மூட்டை, ஆயிரத்தி, 500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதற்கு, ஐந்து லிட்டர் குக்கர், ஒரு கடயாய் அல்லது, 5 லிட்டர் சன் ப்ளவர் ஆயில், 3 கிலோ கோதுமை மாவு, ஒரு ப்ளாஸ்டிக் டப் ஆகியவை இலவசமாக வழங்குவதாக, கடைகளின் முன் விளம்பரம் செய்து, அரிசி வாங்குபவர்களுக்கு இலவச பொருட்களை அளித்து வருகின்றனர்

தமிழகத்தில், நெல் விளைச்சல் அதிகரித்துள்ளதால், அரிசி விலை குறையா வாய்புள்ளதால், அரிசி விலை குறைய வாய்ப்புள்ள, கடைகளில் இலவச பொருட்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், என்ற நம்பிக்கை பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இது குறித்து அரிசி விற்பனையாளர் ஒருவர் கூறியது:

அரிசி மொத்த வியாபாரிகள் கடந்த சில மாதங்களுக்கு முன் ஏற்பட்ட விலை ஏற்றத்தால், வெளி மாநிலங்களில் இருந்து அதிகளவு அரிசியை கொள்முதல் செய்தனர். இந்நிலையில், தற்போது தமிழகத்தில் இருந்து அரிசி வரத்து அதிகரித்துள்ளது. இதனால், விலை குறைந்து வருவதால், வியாபாரிகள் தாங்கள் கொள்முதல் செய்து வைத்த அரிசியை, அவர்கள் கொள்முதல் செய்த விலையை விட சற்று கூடுதலாக விற்பனை செய்து வருகின்றனர்

இதனால் கடந்த மாதம், 1,500 ரூபாய்க்கு மேல் விற்பனையான, 25 கிலோ

கொண்ட அரிசியை மூட்டைகளை வியாபாரிகள், இலவச பொருட்களுடன் கடந்த சில தினங்களாக விற்பனை செய்து வருகிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

**கோமாரி நோய் தாக்கம் குறைந்ததாக ஆறுதல் "23 நாட்களாக கால்நடைகள் இறப்பு இல்லை'**

ஈரோடு: ""கோமாரி நோய் தாக்குதலின் தாக்கம், தற்போது முழுவதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த, 23 நாட்களாக கால்நடைகள் இறப்பு, ஈரோடு மாவட்டத்தில் இல்லை," என, கால்நடை பராமரிப்பு துணை இயக்குனர் டாக்டர் பிரகாஷம் தெரிவித்தார்.

தமிழகம் முழுவதும் கோமாரி நோய் தாக்கத்தால், மாவட்டம் தோறும் பல நூறு கால்நடைகள் இறந்தன. இதனால், விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் பெரும் பாதிப்பை சந்தித்தனர். கால்நடை பாராமரிப்பு துறை சார்பில், தமிழகம் முழுவதும் சிறப்பு மருத்துவ குழுக்கள் சிகிச்சை வழங்கினர்.

ஈரோடு மாவட்டத்தில் கால்நடை பராமரிப்பு துறை சார்பில், 3.50 லட்சம் தடுப்பூசி போடப்பட்டது. இருந்தும், பல நூறு மாடுகள் இறந்தன.

கடந்த செப்., 20ம் தேதி, பெருந்துறை அருகே, வாய்க்கால்மேடு பகுதியை சேர்ந்த கருப்புசாமி, 50, என்பவரது, ஐந்து மாடுகள், கால், வாய்ப்புண்ணால் ஒன்றன்பின் ஒன்றாக இறந்தது.

நசியனூர் டவுன் பஞ்சாயத்து, தயிர்பாளையம், வேட்டை பெரியாம்பாளையம், ஆட்டையாம்பாளையம், ஆழுச்சாம்பாளையம் பகுதியில், கோமாரி நோயால் கால்நடைகள் இறப்பு சதவீதம் அதிகரித்தது.

இந்நிலையில், ஈரோடு மாவட்டத்தில், "ஆவின்' நிறுவனம் சார்பில், கிராமப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள, 800க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் மூலம், 37,000 உறுப்பினர்களின்

கால்நடைகளுக்கும், கால்நடைத்துறையினர் உதவியுடன் பரிசோதனை மேற்கொண்டனர். தடுப்பூசி போடுதல், அறிகுறிகள் தென்பட்டால், சிகிச்சை வழங்குதல் போன்றவைகளில் ஈடுபட்டனர்.

தவிர, மாவட்ட நிர்வாகம் சார்பில், கால்நடை சந்தைகளுக்கும், பிற மாவட்டம், மாநிலங்களில் இருந்து மாடுகள் கொண்டு வர தடை விதிக்கப்பட்டது. இதனால், இறப்பு சதவீதம் படிப்படியாக குறையத்துவங்கியது.

இதுகுறித்து கால்நடை பராமரிப்பு துறை துணை இயக்குனர் டாக்டர் பிரகாஷம் கூறியதாவது:

ஈரோடு மாவட்டத்தில், கோமாரி நோய் தாக்குதல் முற்றிலும் குறைந்து விட்டது. கடந்த நவம்பர், 26ம் தேதிக்கு பின், தற்போது, 23 நாட்களாக கால்நடைகள் இறப்பே இல்லை. கால்நடை மருத்துவர்கள், வீடு வீடாக சென்று கால்நடைகளுக்கு தடுப்பூசியும், மருந்து, மாத்திரை கொடுத்து வருகின்றனர், என்றார்.

## கொப்பரை தேங்காய் ரூ.36 லட்சத்துக்கு ஏலம்

பெருந்துறை: பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள், கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்தில், 36 லட்சம் ரூபாய்க்கு, கொப்பரை தேங்காய்கள் ஏலம் போனது.

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரம் தோறும் புதன் மற்றும் சனிக்கிழ
மைகளில் கொப்பரை தேங்காய் ஏலம் நடக்கிறது.

நேற்று நடந்த ஏலத்துக்கு, பெருந்துறை மற்றும் சுற்றுப்புற பகுதியில் இருந்து விவசாயிகள், 1,053 மூட்டைகளில், 52 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய்களை கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தரம் கொப்பரை தேங்காய், குறைந்தபட்ச விலையாக கிலோ ஒன்று, 72.25 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக, 76.55 ரூபாய்க்கும் விற்பனையானது.

இரண்டாம் தரம் கொப்பரை தேங்காய் குறைந்தபட்ச விலையாக கிலோ ஒன்று, 26.85 ரூபாய்க்கும் அதிகபட்ச விலையாக, 70.25 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம், 36 லட்சம் ரூபாய்க்கு தேங்காய்கள் ஏலம் மூலம் விற்பனையானது.

### இன்று விவசாய குறைதீர் கூட்டம்

கரூர்: ""மாதாந்திர விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் இன்று நடக்கிறது," என, கலெக்டர் ஜெயந்தி கூறினார்.

அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கரூர் மாவட்டத்தில், டிசம்பர் மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர் இன்று கலெக்டர் அலுவலகத்தில் காலை, 10.30 மணிக்கு நடக்கிறது.இதில் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த மனுக்கள் மட்டுமே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஆடு வளர்ப்போர் சங்கக் கூட்டம்

பட்டுக்கோட்டை: பட்டுக்கோட்டை பெருமாள்கோவில் வளாகத்தில் ஆடு வளர்ப்போர் சங்க நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் நடந்தது.

இதில், சங்க தஞ்சை மாவட்ட பொருளாளர் அப்பாசாமி தலைமை வகித்தார்.

மாநில பொதுச்செயலாளர் கருந்தலிங்கம், தஞ்சை மாவட்ட தலைவர் செல்லச்சாமி முன்னிலை வகித்து பேசினர்.

தொடர்ந்து, கூட்டத்தில், ஆடு திருட்டை தடுக்க உரிய முயற்சிகளை எடுப்பது, ஆடு வளர்ப்போர் நல வாரியம் அமைக்க அரசைக் கேட்டுக்கொள்வது என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### தஞ்சையில் 27ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்: கலெக்டர்

தஞ்சாவூர்: "தஞ்சையில், விவசாயிகள் குறைகளை கேட்டு, தீர்வு காணும் வகையில் மாதாந்திர விவசாயிகள் குறைதீர்க்கூட்டம் வரும், 27ம் தேதி நடக்கிறது' என, கலெக்டர் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து, தஞ்சை கலெக்டர் சுப்பையன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தஞ்சை கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், முதல் மாடியில் நடப்பு மாத விவசாயிகள் குறைதீர்க்கூட்டம் வரும், 27ம் தேதி காலை, 10 மணிக்கு நடக்கிறது. இதில், புதிய விவசாய தொழில்நுட்ப வசதிகள் குறித்து திட்ட விளக்கம் அளிக்கப்படும்.

இதில், பங்கேற்கும் விவசாயிகள், சங்க பிரதிநிதிகள் சார்பில் கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மை பொறியியல்துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், தோட்டக்கலைத்துறை போன்ற விவசாயம் தொடர்புடைய கருத்துக்களை தெரிவிக்கலாம்.

கூட்டத்தில், கருத்துக்களை தெரிவிக்க விரும்பும் விவசாயிகள் அனைவரும் தங்களது பெயர், ஊர், தாலுக்கா விபரத்தை வரும், 27ம் தேதி காலை, 8.30 மணி முதல், 10 மணிக்குள் கம்ப்யூட்டரில் பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு தாலுக்காவுக்கும், 2 நபர்கள் மட்டுமே பதிவு அடிப்படையில் அனுமதிக்கப்படுவர். எனவே, விவசாயிகள் குறைகளை தெரிவித்து, பயன்பெறலாம்.

இவ்வாறு, அவர் கூறியுள்ளார்.

பெரியாறு அணையில் நீர் திறப்பது குறைப்பு

கம்பம் ;கம்பம் பள்ளத்தாக்கு பாசனத்திற்காக, முல்லைப் பெரியாற்றில் திறக்கப்படும் தண்ணீரின் அளவை 500 கனஅடியிலிருந்து 300 கனஅடியாக குறைக்க, முடிவு செய்யப்பட்டுள்ளது. கம்பம் பள்ளத்தாக்கில், முல்லைப் பெரியாறு பாசனத்தில் 14 ஆயிரத்து 707 ஏக்கரில் இருபோக நெல் சாகுபடி செய்யப்படுகிறது. சமீப காலங்களில் பருவ மழை சரிவர பெய்யாமல் இருப்பதால், ஒரு போகம் கேள்விக்குறியாகி விடுகிறது. இந்த ஆண்டு அணை நீர் மட்டம் திருப்திகரமாக இருந்ததால் ,முதல் போகம் பிரச்னையின்றி முடிந்தது. தற்போது இரண்டாம் போக

நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நடவு செய்யப்பட்டிருக்கும் பயிருக்கு, இன்னமும் 60 முதல் 70 நாட்களுக்கு தண்ணீர் தேவைப்படும். தற்போது அணை நீர்மட்டம் 117 அடியாகவும், நீர் வரத்து 210 கனஅடியாகவும், அணையிலிருந்து விநாடிக்கு 500 கனஅடி திறந்தும் விடப்படுகிறது.

அணையில் உள்ள நீர் மட்டம், பயிருக்கு தேவைப்படும் அளவு போன்ற விஷயங்கள் குறித்து பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் அன்புச் செழியன், உதவி பொறியாளர் சந்தனக்குமார் ஆகியோருடன், கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் சங்க தலைவர் தர்வேஷ்முகையதீன், கம்பம் விவசாயிகள் சங்க தலைவர் ஓ.ஆர்.நாராயணன், நீரினை பயன்படுத்துவோர் சங்க நிர்வாகி ராமகிருஷ்ணன் உள்ளிட்ட விவசாய சங்க பிரதிநிதிகள் ஆலோசனை நடத்தினர். கூட்டத்தில், அணையில் இருந்து எடுக்கப்படும் 500 கன அடியை இன்று (20.12.13) முதல் 300 கன அடியாக குறைக்க முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவு குறித்து, கலெக்டர் பழனிசாமியின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
பொதுப்பணித்துறை வட்டாரங்களில் விசாரித்த போது, " 300 கனஅடியாக குறைக்கும் போது, தற்போதுள்ள நீர் மட்டத்தை வைத்து 50 நாட்களுக்கு தண்ணீர் தரமுடியும். அதற்கு பிறகு முறைவைத்து பயிரை காப்பாற்ற முடியும். எனவே இன்று முதல் எடுக்கப்படும் தண்ணீரின் அளவு குறைக்கப்படும்,' என்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

**விதை தரம் பராமரிப்பதில் விதிமுறை கடைபிடிக்க வேண்டும்**

திருச்சி, : விதை தரம் பராமரிப்பதில் விதிமுறை களை கடைபிடிக்க வேண் டும் என்று கோவை விதை சான்று இயக்குனர் கோவிந்தராஜ் கேட்டுக்கொண் டார். திருச்சி வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் விதைச்சான்று துறை அலுவலர்களுக்கான 2 நாள் புத்தூட்ட பயிற்சி நடைபெற்றது. திருச்சி, பெரம்பலூர், நாகை உள் ளிட்ட 7 மாவட்டங்களை சேர்ந்த விதைச்சான்று உதவி இயக்குநர்கள் மற்றும் விதைச்சான்று அலுவலர் கள் கலந்து கொண்டனர். கோவை வேளாண் இணை இயக்குநர் (விதை ஆய்வு) சவுந்தரம் தலைமை வகித்தார். திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் பாண்டியராஜன் பயிற்சியினை துவக்கி வைத்தார்.

திருச்சி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொ) சந்திரசேகரன் தரமான விதை உற்பத்தியில் விதை சான்றுத் துறையின் பங்கு, திருச்சி வேளாண்மை கல்லூரி மர பியல் துறை பேராசிரியை கீதா, நெல் சிறுதானியம் மற்றும் பயறு வகைகளின் வெவ்வேறு ரகங்களின் குணாதிசயங்கள், பயிர் நோயியல் துறை பேராசிரி யர் இனயத்துல்லா, வைரஸ் நோய்கள் மற்றும் அவற் றைக் கட்டுப்படுத்தும் முறைகள், பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் கல்யாணசுந்தரம், வயல் மற்றும் சேமிப்பு நிலைகளில் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்துதல், சிறுகமணி கரும்பு ஆராய்ச்சி நிலைய தலைவர் பன்னீர்செல்வம், காலம் தாழ்த்தி நடவு செய்வதால் ஏற்படும் பாதிப்புகள் மற் றும் அவற்றை திறம்பட கையாள்வது குறித்து பேசி னர்.

திருச்சி உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் சந்திரசேகரன் நாயர் விதைப் பண்ணை தள்ளு படி குறித்து பயிற்சியளித் தார்.நேற்று  நிறைவு நாள் பயிற்சி நடந்தது. கோவை விதைச்சான்று இயக்குநர் கோவிந்தராஜ், விதை தரத்தை பராமரிப்பதில் விதிமுறைகளை சரியாக கடைபிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண் டார். பெரம்பலூர் விதைச்சான்று உதவி இயக்குநர் முரளிதரன், வயல்மட்ட அளவில் பொதுவாக எழக்கூடிய நடைமுறை பிரச்னைகள் மற்றும் அவற்றை எவ்வாறு கையாள வேண் டும் என்பது குறித்து கலந்துரையாடினார். விதைப் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் மனோன்மணி, விதை பரிசோதனை முறைகள் குறித்தும், விதை ஆய்வாளர் அருள்ராஜ், விதைச்சட்டம் மற்றும் விதை ஆய்வு முறைகள் குறித்து விரிவாக எடுத்துக் கூறினர்.
இந்த புத்தூட்டப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை திருச்சி விதைச்சான்று உதவி இயக்குநர் எழில்அரசு மற்றும் விதைப்பரிசோதனை அலுவலர் ரவி ஆகியோர் செய்திருந்தனர்.

**தமிழகத்தின் அரிசி தேவை பிற மாநிலங்கள் மூலமே பூர்த்தியாகிறது வணிகர் சம்மேளன தலைவர் பேட்டி**

காரைக்குடி, : காரைக் குடி அருகே அரியக்குடியில் அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் நெல் அரிசி வணிகர்கள் சம்மேளன மாநில செயற்குழு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு பின் மாநில தலைவர் துளசிங்கம் கூறியதாவது:  தமிழகத்தில் 3 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட அரிசி ஆலைகள் உள்ளன. இந்த ஆலைகளுக்கு பெரும்பாலும் ஆந்திரா, கர்நாடகா, மத்தியப்பிரதேசம், மேற்குவங்கம், குஜராத், அரியானா ஆகிய மாநிலங்களில் இருந்துதான் நெல்வரத்து உள்ளது. பிற மாநிலங்களில் இருந்து வரும் நெல் மூலம் தான் தமிழகத்தின் அரிசி தேவை பூர்த்தியாகிறது. எனவே இங்கிருந்து அரிசி ஏற்றுமதிக்கு வாய்ப்பில்லை.

தமிழகத்தில் தற்போது அரிசி விலை சீராக உள்ளது. பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழகத்தில் அரிசி விலை குறைவுதான். புதிய அரிசி ஆலைகள் துவங்கும்போது 120 எச்.பி., திறனுள்ள மின்இணைப்பு மட்டுமே வழங்கப்படுகிறது. இதனை உயர்த்தி 200 எச்.பி.யாக வழங்க வேண்டும். உணவு பாதுகாப்பு சட்டத்தில், அரிசி ஆலைகளுக்கு தேவையான சில மாற்றங்கள் கொண்டு வர வேண்டும் என்றார். மாநில செயலாளர் மோகன், பொருளாளர் சுப்பிரமணி, சிவகங்கை மாவட்ட தலைவர் படிக்காசு, செயலாளர் கணேசபாண்டியன், மாநில பொதுக்குழு உறுப்பினர் கிருஷ்ணன் கலந்து கொண்டனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் சரிவு**



மேட்டூர் : மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு விநாடிக்கு 659 கனஅடியாக குறைந்துள்ள நிலையில், அணையின் நீர்மட்டம் 77.22 அடியாக சரிந்துள்ளது.மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நாளுக்குநாள் குறைந்து வருகிறது. நேற்று முன்தினம் காலை விநாடிக்கு 1,343 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை 8 மணி நிலவரப்படி வினாடிக்கு 659 கனஅடியாக குறைந்துள்ளது. பாசனத்திற்காக விநாடிக்கு 9,400 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.அணைக்கு வரும் நீரின் அளவை விட, திறப்பு அதிகமாக உள்ளதால் நீர்மட் டம் சரிந்து வருகிறது. நேற்று முன்தினம் 78.02 அடியாக இருந்த நீர்மட் டம், நேற்று காலை 77.22 அடியாக குறைந்துள்ளது. தற்போதைய நீர் இருப்பு 39.24 டி.எம்.சி ஆகும்.

**வெங்காயம் ஏற்றுமதி விலை குறைப்பு**



புதுடெல்லி: வெங்காயம் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில் மத்திய அரசு அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது. வெங்காயத்தின் குறைந்தபட்ச ஏற்றுமதி விலை ஒரு டன் 350 டாலராக (யி21,700) குறைத்துள்ளது. இதற்கு முன்பு ஒரு டன் 800 டாலராக (யி49,600) இருந்தது. வெங்காயம் வரத்து அதிகரித்ததால், மொத்த விலை மார்க்கெட்டில் விலை சரிந்தது. இதையடுத்து, ஏற்றுமதி விலை குறைக்க வேண்டும் என்று விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்தனர். எல்லா வகை வெங்காயத்தின் ஏற்றுமதி விலை ஒரு டன் 350 டாலராக குறைக்கப்பட்டுள்ளது என்று வெளிநாட்டு வர்த்தக துறை டைரக்டர் ஜெனரல் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

**கடும் பனியால் பூக்கள் வரத்து குறைவு**

கோவை,: கோவை மலர்அங்காடிக்கு மல்லிகை பூ, முல்லை பூ, ஜாதி பூ போன்றவை புளியம்பட்டி, சத்தியமங்கலம், அன்னூர் ஆகிய பகுதிகளில் இருந்து வருகிறது. மேலும் அரளி பூ, சம்பங்கி பூ, கோழிகொண்டை, மருகு போன்றவை நிலக்கோட்டை, திண்டுக்கல், சேலம் போன்ற பகுதிகளில் இருந்து வருகிறது.

இங்கு சாதாரன நாட்களில் 20 முதல் 30 டன் பூக்களும், விஷேச நாட்களில் 300 டன்கள் வரை பூ வரத்து இருக்கும். கடந்த சில நாட்களாக நிலவி வரும் கடும்பனி காரணமாக பூக்கள் வரத்து குறைந்து காணப்பட்டது. கடந்த ஒரு வாரமாக 4 டன்களுக்கும் குறைவான அளவே வரத்து இருந்தது. இதன் காரணமாக பூக்களின் விலையிலும் நிலையில்லாத தன்மை நிலவி வருகிறது. இதனால் விற்பனையும் சற்று மந்தமாகவே இருந்தது.

கடந்த வாரம் முகூர்த்தங்கள் அதிகம் இருந்ததால் பூக்களின் விலை சற்று அதிகமாக இருந்தது. கடந்த வாரம் மல்லிகை பூ கிலோ ஆயிரம் ரூபாய்க்கும், முல்லை, ரூ.800க்கும் விற்பனையானது. ஆனால் தற்போது பண்டிகைகள் மற்றும் முகூர்த்த தினங்கள் எதுவும் இல்லாததால் சற்று விலை குறைந்துள்ளது.

பழைய விலை அடைப்புக்குள் மல்லிகை ரூ.800(1000), முல்லை ரூ.500(800), ஜாதி மல்லி ரூ.420(வரத்து இல்லை), காக்கடை ரூ.320(700) செவ்வந்தி கிலோ ரூ.100(140), சம்பங்கி ரூ.100(120), அரளி ரூ.160(200), லில்லிபூ ரூ.600(800), செண்டு மல்லி, மஞ்சள் செண்டு மல்லி ரூ.40(60), துளசி ரூ.30(40), தாமரை ரூ.5(15), சாதா ரோஸ் ரூ.40(1கட்டு), ஹைபிரிட்(ஊட்டி) ரூ.100 கோழிக் கொண்டை ரு.40(80),க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

இது குறித்து கோவை மாவட்ட மலர் வியாபாரிகள் சங்க பொருளாளர் ஐயப்பன் கூறுகையில் ‘கடந்த சில நாட்களாக நிலவிவரும் கடும் பனி காரணமாக பூக்களின் வரத்து மிகவும் குறைந்துள்ளது. மார்கழி மாதம் என்பதால் விற்பனையும் மந்தமாகவே உள்ளது.

## நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி வரும் 24ம் தேதி நடக்கிறது

நாமக்கல், :நாமக்கல் திருச்சி சாலை கால்நடை மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள, கோழிகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மையத்தில் பண்ணையாளர்களுக்கான, நாட்டுக்கோழி வளர்ப்பும் மற்றும் மூலிகை முதலுதவி மருத்துவமும் என்ற தலைப்பில், ஒரு நாள் பயிற்சி வகுப்பு வரும் 24ம் தேதி நடக்கிறது. மதியம், 1.30 மணிக்கு நடக்கும் இப்பயிற்சி வகுப்பில் பங்கேற்க விருப்பம் உள்ளவர்கள், 94432 51330, 02486 233230 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.

**முத்துப்பேட்டையில் பருவநிலை மாற்றத்தால் பாதித்த நெற்பயிர் வயல்களில் ஆய்வு**

முத்துப்பேட்டை, : முத்துப்பேட்டையில் பருவ நிலை மாற்றத்தால் பாதித்த நெற்பயிர்களை அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.
முத்துப்பேட்டை வட்டார பகுதியில் விவசாயிகள் தங்களது வயல்களில் நேரடி நெல் விதைப்பில் பிபிடி 5204 மற்றும் ஏடிடி39 ஆகிய ரக பயிர்களை சாகுபடி செய்துள்ளனர். இதில் தற்போது ஏற்பட்ட பருவநிலை மாற்றம் காரண மாக நெல்மணிகள் நிறம் மாற்றம் நோய் பரவலாக காணப்படுகிறது. இதனால் பெரும்பாலான விவசாயிகள் தங்களின் சாகுபடி பயிர்களை பாதுகாக்க பல் வேறு செயல்முறைகளை செய்து வருகின்றனர்.
இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விவசாயிகள் தகவல் தெரிவித்தனர். இந்நிலையில் தமிழ்நாடு வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலைய தலைவர் பேராசிரியர் பரமகுரு, பூச்சியியல் துறை பேராசிரியர் ராஜமாணிக்கம், வேளாண்மை துணை இயக்குனர் நடேசன், முத்துப்பேட்டை வேளாண் மை உதவி இயக்குனர் வாணி ஆகியோர் முத்துப்பேட் டை வட்டாரத்திற்கு உட் பட்ட பகுதிகளில் வயல் களை பார்வையிட்டனர். அப்போது தில்லைவிளாகம் கிராமத்தில் வயல் களை பார்வையிட்டு விவசாயிகளிடம் கருத்துக்களை கேட்டறிந்தனர். பின்னர் விவசாயிகளி டம் இந்த நோய் பல்வேறு பூஞ்சானங்களின் கூட்டு தாக்குதலால் உண்டாகிறது. நோயால் பாதிக்கப்பட்ட நெல் மணிகள் வளர்ச்சி தடைபடுவதால் மணிகள் சிறுத்து சுருங்கி விடும் அல்லது பதராக மாறிவிடும். இதனால் மகசூல் இழப்பு ஏற்படும். இந்த நோயானது விதை மற்றும் காற்று மூலம் பரவுகிறது. இதை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு கார்பண்டாசிம் 200 கிராம் என்ற மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து மாலை வேளையில் தெளிக்க வேண்டும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். அப்போது வேளாண் அலுவலர்கள் இந்திரஜித், உதவி வேளாண்மை அலுவலர்கள் சசிக்குமார், ரவி மற் றும் முன்னாள் வேளாண்மைதுறை அலுவலர் ரங்கசாமி உடனிருந்தனர்.

**சீர்காழி அருகே நெல் கதிரடிக்கும் களம் அமைக்க நிதி ஒதுக்கீடு**

*சீர்காழி. : சீர்காழி அருகே நெல் கதிரடிக்க களம் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.*

நாகை மாவட்டம் சீர்காழி அருகே திருவெண்காடு வடபாதி பகுதியில் 300 ஏக்கரில் விவசாயிகள் நெல் சாகுபடி செய்து வருகின்றனர். இந்த பகுதியில் அறுவடை செய்த நெல் கதிர்களை சேமித்து கதிரடிக்க போதிய இடவசதி இல்லாததால் விவசாயிகள் சிரமப்பட்டு வந்தனர். இதனால் இந்த பகுதியில் நெல் கதிரடிக்க களம் அமைத்து தர நிதி ஒதுக்க வேண்டுமென மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் சந்திரசேகரனிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதைதொடர்ந்து மாவட்ட ஊராட்சி தலைவர் தனது ஊராட்சிக்குழு நிதியின்கீழ் நெல் களம் அமைக்க ரூ.2.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். இந்த தொகையை கொண்டு விரைவில் நெல் கதிரடிக்கும் களம் அமைக்கப்பட உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**கடல் சீற்றத்தால் மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவில்லை**

பூம்புகார், :பூம்புகார் பகுதியில் கடல் சீற்றத்தால் 4500 மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை.

பூம்புகார், வானகிரி, புதுக்குப்பம் ஆகிய பகுதிகளை சேர்ந்த 2,250 பைபர் படகுகள், 100 விசை படகுகள், 75க்கும் மேற்பட்ட கட்டு மரங்கள் தினசரி அதிகாலை கடலுக்கு மீன் பிடிக்க சென்று வருவது வழக்கம். நேற்று கடல் சீற்றமாக இருந்ததால் இப்பகுதியை சேர்ந்த 4,500 மீனவர்கள் யாரும் மீன்பிடிக்க செல்லவில்லை. இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், கடல் சீற்றத்தால் மீனவர்களின் வாழ்வாதாரம் வெகுவாக பாதித்துள்ளது. கடல் சீற்றம் காரணமாக நல்ல மீன்களை கொண்டு வாழ்வாதாரத்தை உயர்த்த முடியவில்லை என்றனர்.

**வேதாரண்யம் பகுதியில் கருப்பட்டி விற்பனை அமோகம்**

வேதாரண்யம் : வேதாரண்யம் பகுதிகளில் கருப்பட்டி விற்பனை சூடுபிடித்துள்ளது.

சித்த மருத்துவத்தில் முக்கிய பங்காற்றும் கருப்பட்டியின் பயன்பாட்டை பொதுமக்கள் மறந்துவிட்டனர். பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தி வரும் வெல்லம், சர்க்கரையாலும் நோய் அதிகரித்து வருகிறது. வேதாரண்யம் பகுதியில் பெரும்பான்மையான மக்கள் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். அதே நேரத்தில் வேதாரண்யம் பகுதியில் காபி, டீக்களில் கருப்பட்டியை பயன்படுத்தும் பழக்கம் அதிகரித்து வருகிறது.

மனிதர்கள் மட்டுமில்லாமல் மாடுகளுக்கும் நோய் எதிர்ப்பு சக்தியை கொடுப்பதால் கருப்பட்டியை வாங்குவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. குறிப்பாக கோமாரி நோய் தடுப்புக்கு அளிக்கப்படும் நாட்டு மருந்து கலவையில் கருப்பட்டியின் பங்களிப்பு முக்கியமானது. இதனால் வேதாரண்யம் பகுதியில் கருப்பட்டியின் விற்பனை சூடுபிடித்துள்ளது. முன்னர் சிறிய அளவில் கூடைகளில் கருப்பட்டியை பெண்கள் பஸ்சில் எடுத்து வந்து விற்பனை செய்தனர்.

தற்போது பல குடும்பத்தினர் ஒன்று சேர்ந்து திருநேல்வேலி, கோவில்பட்டி, திருச்செந்தூர், தூத்துக்குடி போன்ற வெளிமாவட்டங்களிலிருந்து வேன்களில் எடுத்து வந்து கருப்பட்டியை விற்பனை செய்து வருகின்றனர். ஒரு கிலோ கருப்பட்டி ரூ.80 முதல் ரூ.100 வரை விற்பனை செய்யப்படுகிறது.

**24ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

நாகை,: நாகையில் வரும் 24ம்தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெறுகிறது.

நாகை கலெக்டர் அலுவலகத்தில் உள்ள முதன்மை கூட்டரங்கில் வருகிற 24ம்தேதி (செவ்வாய்) காலை 11 மணி அளவில் மாவட்ட கலெக்டர் முனுசாமி தலைமையில், விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்தில், மாவட்ட விவசாயிகள், விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் கலந்து

கொண்டு தங்கள் கருத்துக்களை தெரிவித்து பயன்பெறும்படி கலெக்டர் முனுசாமி விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கேட்டுக்கொண்டுள்ளார்.

**பனி கொட்டுது... மல்லிகை கெட்டது!**

தேவாரம், : தேவாரம் பகுதியில் கொட்டும் பனியால் மல்லிகைப்பூக்கள் கருகி வருகின்றன.

தேனி மாவட்டத்தில் பல்லவராயன்பட்டி, மேலசிந்தலைசேரி, தே.சிந்தலைசேரி, சீலையம்பட்டி, உள்ளிட்ட பல்வேறு ஊர்களிலும் அதிகமான அளவில் மல்லிகை பூக்கள் விவசாயம் நடைபெறுகிறது. இங்கு விளையும் பூக்கள் அதிகளவில் கம்பம், சின்னமனூர் பகுதிகளில் செயல்படும் மார்க்கெட்டுகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது. பூக்கள் விவசாயத்தில் இப்பகுதி விவசாயிகளிடையே அதிக ஆர்வம் காணப்படுகிறது. இதனால் எல்லா மாதங்களிலும் இங்குள்ள கூலி தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை அளிப்பதாகவும் இத்தொழில் உள்ளது. மல்லிகையை பொருத்தவரை பனிக்காலங்களில் மலரும் பூக்கள் அனைத்தும் அப் படியே கருகிவிடும். இதனால் உற்பத்தி பெருமளவு பாதிக்கப்படும். விளைச்சலே இருக்காது. இக்காலங்களில் மல்லிகை பூக்களை பறிக்க முடியாத அளவிற்கு கடுமையான பாதிப்பு உண்டாகிறது. தற்போது மார்கழி மாதம் என்பதால் கடுமையான பனிப்பொழிவு உள்ளது. கடந்த சில நாட்களாகவே தேவாரம், கோம்பை பகுதிகளில் பனிப்பொழிவு அதிகம் உள்ளதால் மல்லிகை பூக்கள் கருகி வருகின்றன. இதனால் விவசாயிகள் கடும் பாதிப்படைந்து வருகின்றனர். வெளி மார்க்கெட்களுக்கு பூக்களை அதிக அளவில் கொண்டு செல்ல முடியாத நிலை உண்டாகி உள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், 'ஒவ்வொரு ஆண்டும் பனிக்காலங்களில் மல் லிகை பூக்கள் விளைச் சல் கடுமையாக பாதிக்கப்படும். பூக்கள் விளையும்போதே கருகி விடுகிறது. தற்போது பனியின் தாக்கம் கூடுதலாக உள்ளதால் இதன் பாதிப்பு தெரிய ஆரம்பித்துள்ளது. இதனால் மல்லிகைப்பூக்கள் விலை உயரக்கூடிய வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன' என்றனர்.

**கடலோர மீனவர்கள் மீன்பிடி கலன்கள் அமைக்க அரசு மானியம் கலெக்டர் நந்தகுமார் தகவல்**

ராமநாதபுரம், : கட லோர மீனவர்கள் தூண் டில் மூலம் மீன்பிடிப்பு மற்றும் செவுல் வலை பயன்படுத்தி மீன்பிடிக்கும் மீனவர்களுக்கு மீன்பிடி கலன் அமைப்பதற்கு தமிழக அரசு மானியத்துடன் நிதி வழங்கவுள்ளது என கலெக்டர் நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

ராமநாதபுரம் மாவட்ட கடலோர மீனவர்கள் தூண்டில் மூலம் சூரை மீன்பிடிப்பு மற்றும் செவுல் வலை பயன்படுத்தி மீன்பிடித்திட புதிய மீன்பிடி கலன்கள் கட்டுவதற்கு தமிழக அரசு ரூ.60 லட்சத்தில் 50 சதவீதம் மானியத்துடன் ரூ.30 லட்சம் வரை வழங்க உத்தரவிட்டுள்ளது. இத்திட்டத்தில் பயன்பெறுவதற்கு மீனவர்கள் ஒரு குழுவாகவோ அல்லது அதிகபட்சம் 6 மீனவர்கள் இருக்க வேண்டும். மீனவர்கள் சங்கம் மூலமாகவோ, தனிநபராகவோ விண்ணப்பிக்கலாம். ஒவ்வொரு மீனவருக்கும் தனித்தனி குடும்ப அட்டை இருக்க வேண்டும். முழுநேர மீன்பிடி தொழில் செய்பவராகவும், அதிகபட்சம் 60 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். மீன்துறையினரால் வழங்கப்பட்ட பயோமெட்ரிக் அட்டை உடையராகவும், மீன்துறை மற்றும் கடல் பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி முகமையில் ஏற்கனவே மானியம் பெறாதவராகவும் இருக்க வேண்டும். மீன்பிடி விசைப்படகு வைத்து தொழில் செய்வதற்கு பதிலாக தூண்டில் மீன்பிடிப்புக்கு மாறுவதற்கு ஆர்வம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும். இது தொடர்பான விண்ணப்பங்களை ஷ்ஷ்ஷ்.யீவீsலீமீக்ஷீவீமீs.tஸீ.வீஸீ. என்ற இணையதளத் தில் பதிவிறக்கம் செய்ய லாம். மேலும் விருப்பமுள்ளவர்கள் கலெக்டர் அலு வலக வளாத்தில் உள்ள மீன்துறை துணை இயக்குனர் அலுவலகம் மற்றும் மீன்துறை உதவி இயக்குனர் அலுவலகங்களில் விண்ணப்பங்களை இலவசமாக பெற்றுக்கொண்டு பயனடையலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

நபார்டு வங்கி மூலம் ரூ.3,996 கோடிக்கான கடன் அறிக்கை வெளியீடு:
விவசாயத்திற்கு நீண்ட கால வங்கி கடன் கலெக்டர் தகவல்



தஞ்சாவூர்,

நபார்டு வங்கி மூலம் ரூ.3 ஆயிரத்து 996 கோடிக்கான கடன் அறிக்கையை கலெக்டர் சுப்பையன் வெளியிட்டார். இதன் மூலம் விவசாயத்திற்கு நீண்ட கால கடன் கிடைக்கும் என்றார்.

<u>வளம் சார்ந்த கடன்</u>

தஞ்சை மாவட்ட நபார்டு வங்கி சார்பில் வளம் சார்ந்த கடன் திட்டம் ரூ.3 ஆயிரத்து 996 கோடியே 57 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு உள்ளது. இதில் குறுகிய கால பயிர்க்கடன்களுக்கு ரூ.2 ஆயிரத்து 66 கோடியே 84 லட்சமும், நீண்ட காலக்கடன்களுக்கு ரூ. ஆயிரத்து 34 கோடியே 91 லட்சத்திற்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு உள்ளது.

மேலும் தோட்டக்கலை மற்றும் சிறு, குறு தொழில்களுக்கு ரூ.294 கோடியே 81 லட்சமும், மற்ற முன்னுரிமை கடன்களுக்கு ரூ.600 கோடியிலும் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு உள்ளது. இந்த திட்ட அறிக்கையை தஞ்சை மாவட்ட கலெக்டர் சுப்பையன் நேற்று வெளியிட்டார். இதனை நபார்டு வங்கி மாவட்ட முதன்மை மேலாளர் கஜேந்திரநாதன், மாவடட வளர்ச்சி மேலாளர் சுப்பிரமணியன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

<u>வளம் நிறைந்த தொழில்</u>

பின்னர் கலெக்டர் சுப்பையன் கூறியதாவது:–

நபார்டு வங்கியின் இந்த திட்ட அறிக்கை விவசாயத்தில் நீண்ட கால கடன் அளிப்பதற்கான சாத்தியக்கூறுகளை விளக்கும் வண்ணம் உள்ளது. இது போன்ற கடன் வசதிகள் விவசாயத்தில் அடிப்படை கட்டுமான வசதிகளை பெருக்கி விவசாயத்தை ஒரு வளம் நிறைந்த தொழிலாக மாற்றிட உதவும்.

இவ்வாறு அவர் கூறினார்.

<u>வருடாந்திர கடன் திட்டம்</u>

நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி மேலாளர் சுப்பிரமணியன் கூறுகையில், ‘‘இந்த கடன் திட்ட அறிக்கை பல அரசு துறைகள், வங்கிகள் மற்றும் அனைத்து துறை சார்ந்த அதிகாரிகளின் ஆலோசனை மற்றும் புள்ளி விவரங்கள் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு உள்ளது’’என்றார்.

கஜேந்திரநாதன் கூறுகையில், ‘‘கடந்த ஆண்டு விவசாயம் சார்ந்த கடன், திட்டமிட்டதை விட 169 சதவீதம் அதிகமாக வழங்கப்பட்டுள்ளது. இந்த வளம் சார்ந்த கடன் திட்ட அறிக்கையின் பேரில் மாவட்டத்திற்கான வருடாந்திர கடன் திட்டம் தயாரிக்கப்படும்’’என்றார்.

**தஞ்சை மாவட்டத்தில் சம்பா அறுவடை பணிகள் தொடங்கின**



தஞ்சாவூர், -

தஞ்சை மாவட்டத்தில் சம்பா அறுவடை பணிகள் தொடங்கி உள்ளன.

நெற்களஞ்சியம்

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறும். மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுவதை பொறுத்து இதன் சாகுபடி பரப்பளவு அமையும்.

ஆனால் இந்த ஆண்டு குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையில் போதிய தண்ணீர் இல்லாததால் ஜூன்12-ந்தேதி திறக்கப்படவில்லை. மேட்டூர் அணையில் இருந்து தாமதமாக திறக்கப்பட்டது. இதனால் குறுவை சாகுபடி பரப்பளவு குறைவாகவே நடைபெற்றது. இதனால் சம்பா சாகுபடியின் பரப்பளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

சம்பா, தாளடி சாகுபடி

அதன்படி தஞ்சை மாவட்டத்தில் சம்பா சாகுபடி 1 லட்சத்து 18 ஆயிரம் எக்டேரும், தாளடி சாகுபடி 25 ஆயிரம் எக்டேரும் நடை பெறும் என எதிர்பார்க்கப் பட்டது. இதற்கு தேவையான விதைநெல், உரங்கள் மற்றும் இடுபொருட்கள் அனைத்தும் இருப்பு வைக்கப்பட்டு விவ சாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்தன. ஆனால் சம்பா

சாகுபடி நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எட்டவில்லை. தஞ்சை மாவட் டத்தில் 1 லட்சத்து 6 ஆயிரம் எக்டேரில் தான் சாகுபடி நடைபெற்றது. ஆனால் தாளடி நிர்ணயிக்கப் பட்ட இலக்கை விட கூடுதலாக 5 ஆயிரம் எக்டேரில் நடை பெற்றுள்ளது. இறுதியாக உய்யக்கொண் டான் வாய்க்கால் பாசன பகுதிகளில் மட்டும் சம்பா சாகுபடி பணிகள் நடை பெற்றன.

<u>அறுவடை தொடங்கியது</u>

இதில் ஒரத்தநாடு, தஞ்சை உள்பட பல்வேறு பகுதிகளில் முன்பட்ட சம்பா சாகுபடி நடைபெற்றது. இந்த பகுதி களில் தற்போது கதிர் விளைந்து விட்டது. இதை யடுத்து தற்போது அறுவடை பணிகள் தொடங்கி விட்டன. தற்போது ஒரத்தநாடு பகுதி களில் கடந்த 2 நாட்களாக சம்பா அறுவடை பணிகள் தொடங்கி நடைபெற்று வரு கின்றன. தற்போது அறுவடை எந்திரங்கள் மூலம் சம்பா அறு வடைகள் நடைபெற்று வரு கின்றன. கடந்த 2 நாட்களில் மட்டும் 60 ஏக்கர் அறுவடைப் பணிகள் முடிவடைந்துள் ளன. தற்போது குளிர்காலம் அதிகமாக இருப்பதையொட்டி தஞ்சை மாவட்டத்தில் 20 சதவீதம் ஈரப்பதம் வரை நெல் கொள்முதல் செய்ய உத்தர விடப்பட்டு உள்ளது. ஆனால் 20 சதவீதம் ஈரப்பதம் வரை கொள்முதல் செய்வதற்கான ஆணை வரைவில்லை என்று கொள்முதல் நிலையத்தினர் தெரிவிப்பதாக விவசாயிகள் கூறி உள்ளனர்.

**விவசாயிகளுக்கு ரூ.41 லட்சத்தில் வேளாண் கருவிகள் கலெக்டர் வழங்கினார்**



வேளாண் பொறியியல் துறை சார்பில் பவர் டிரில்லர் வண்டியை கலெக்டர் தரேஸ் அஹமது வழங்கியபோது எடுத்த படம். அருகில் உதவி பொறியாளர் ராஜேந்திரன் உள்ளார்.

பெரம்பலூர் மாவட்ட வேளாண் பொறியியல் துறை சார்பில் விவசாயி களுக்கு ரூ.41 லட்சம் மதிப்பிலான வேளாண் கருவிகளை மாவட்ட கலெக்டர் தரேஸ் அஹமது வழங்கினார்.

<u>வேளாண் எந்திரங்கள் வழங்கும் விழா</u>

பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வேளாண்மை பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்கு வேளாண் எந்திரங்கள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் கலெக்டர் தரேஸ் அஹமது கலந்து கொண்டு 8 பேருக்கு ரூ.11 லட்சத்து 40 ஆயிரத்து 840 மதிப்பிலான பவர் டிரில்லர்களை ரூ.3 லட்சத்து 60 ஆயிரம் அரசு மானிய உதவியுடனும், 4 பேருக்கு ரூ.28 ஆயிரத்து 300 மதிப் பிலான விசை தெளிப்பான் களை ரூ.14 ஆயிரத்து 148 மதிப்பிலான அரசு மானிய உதவியுடன், 4 பேருக்குரூ.21 ஆயிரத்து 400 மதிப் பிலான பேட்டரி தெளிப்பான் களை ரூ.10 ஆயிரத்து 700 மதிப்பிலான அரசு மானிய உதவியுடனும், 1 நபருக்கு ரூ.3 லட்சத்து 25 ஆயிரம் மதிப் பிலான வைக்கோல் கட்டும் கருவிகளை ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான அரசு மானிய உதவியுடனும், 1 நபருக்கு ரூ.3 லட்சத்து 43 ஆயிரம் மதிப்பிலான பல் வகை கதிரடிக்கும் கருவி யினை ரூ.1 லட்சத்து 50ஆயிரம் மதிப்பிலான அரசு மானிய உதவியுடனும், 7 பேருக்கு ரூ.17 லட்சத்து 2 ஆயிரத்து 750 மதிப்பிலான விசை களை யெடுப்பான்களை ரூ.6 லட் சத்து 93 ஆயிரம் மதிப் பிலான அரசு மானிய உதவியு டனும், 1 நபருக்கு 93 ஆயிரம் மதிப்பிலான சுழல் கலப்பை கருவியினை ரூ.20 ஆயிரம் மதிப்பிலான அரசு மானிய உதவியுடனும் விவசாயிகளுக்கு வழங்கினார்.

<u>ரூ.41 லட்சம்</u>

மேலும், ஒருவருக்கு ரூ.2 லட்சத்து 41 ஆயிரம் மதிப்பி லான நெல் நடவு எந்திரத்தை ரூ.1 லட்சத்து 20 ஆயிரத்து 500 மதிப்பிலான அரசு மானிய உதவியுடனும், 1 நபருக்கு ரூ.1 லட்சத்து 28 ஆயிரத்து 500 மதிப்பிலான சோளம் கதிர் அடிக்கும் எந்திரத்தை ரூ. 60ஆயிரத்து 500 மதிப்பிலான அரசு மானியஉதவியுடனும், 2 பேருக்கு ரூ36 ஆயிரத்து 200 மதிப்பிலான தீவன புல் நறுக்கும் கருவியை ரூ 18 ஆயிரத்து 100 மதிப்பிலான அரசு மானியஉதவியுடனும், 1 நபருக்கு ரூ.28 ஆயிரம் மதிப் பிலான புல்வெட்டும் கருவி யினை ரூ14 ஆயிரம் மதிப்பி லான அரசு மானிய உதவியு டன் ஆக மொத்தம் 31 விவசா யிகளுக்கு ரூ.15

லட்சத்து ஆயிரத்து 948 அரசுமானிய உதவியுடன் ரூ.40 லட்சத்து 92 ஆயிரத்து 990 மதிப்பிலான வேளாண் எந்திரங்களை மாவட்ட கலெக்டர் வழங்கினார்.

<u>நடப்பு ஆண்டு</u>

பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறையில் நடப்பாண்டில் 62 விவசாயிகளுக்கு 64 லட்சத்து 58 ஆயிரத்து 871 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் ரூ.23 லட்சத்து 34 ஆயிரத்து 764 மதிப்பிலான அரசு மானிய உதவியுடன் வழங்கப்பட்டுள்ள தாக கலெக்டர் தரேஸ் அஹமது தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வேளா ண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் ராஜேந்திரன், உதவி பொறி யாளர்கள் சிவக்குமார் மற் றும் ஆறுமுகம, இளநிலை பொறி யாளர் சேகர் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**கரும்பு கொள்முதல் விலையை ரூ.3,500 ஆக அறிவிக்க வேண்டும்**
**உற்பத்தியாளர்கள் சங்க கூட்டத்தில் கோரிக்கை**



அரியலூர்,

கரும்பு கொள்முதல் விலையை ரூ.3 ஆயிரத்து 500 ஆக அறிவிக்க வேண்டும் என்று கோத்தாரி சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர்கள் சங்க கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

<u>கரும்பு உற்பத்தியாளர்கள் சங்க கூட்டம்</u>

கோத்தாரி சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர்கள் சங்க கூட்டம் அரியலூர் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.கூட்டத்திற்கு சங்கத்தலைவர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார்.செய லாளர் பன்னீர்,துணை செய லாளர்கள் வில்வநாதன், யோசுதாஸ், குமார், பொரு ளாளர் விஜயகுமார்,சட்ட ஆலோசகர் பழனிச்சாமி ஆகியோர் கலந்து கொண் டார்கள்.

<u>தீர்மானங்கள்</u>

கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

கரும்பு சாகுபடி மிகவும் மோசமான நிலையில் உள்ள தால் கரும்பு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட் டுள்ளார்கள்.உற்பத்தி செலவு அதிகமாகிறது, விவசாய பணிக்கு ஆட்கள் கிடைப்பது கடினமாக உள்ளது.இதனை கருத்தில் கொண்டு கரும்பிற் கான கொள்முதல் விலையை அறிவிக்க முத்தரப்பு கூட்டம் கூட்டி விலையை முடிவு செய்ய தமிழக அரசை கேட்டுக்கொள்வது.

<u>மழை குறைவு</u>

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வெட்டிய கரும்பு கடுமையான வறட்சி காரண மாக வளர்ச்சி குறைந்தும், நோய்கள் தாக்கியும் மிகவும் மோசமாக உள்ளது.அதன் வயது 13மாதம் ஆகிறது.இதற்கு ஆலை திறக்காமல் காலம் தாழ்த்தினால் கரும்பின் எடை குறைந்து விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார் கள்.அரியலூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு மழை அளவு குறை வாக பெய்துள்ளதால் மார்ச் ஏப்ரல் மாத நடவு கரும்புகள் மிகவும் பாதிக்கப்படும் ஆகவே உடனடியாக கோத்தாரி சர்க்கரை ஆலை அறவை பணியை தொடங்க வேண்டும்.

<u>டன் ஒன்றுக்கு ரூ.3500</u>

விவசாயிகளின் நிலை மையை கருத்தில் கொண்டு கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3ஆயிரத்து 500 வயல் விலையாக அறிவிக்க தமிழக அரசை கேட்டுக்கொள்வது என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.

**மேட்டூர் அணையின் நீர் மட்டம் நிலவரம்**



சேலம்,

மேட்டூர் அணையின் நீர் மட்டம் இன்று காலை நிலவரப்படி 77.22 அடியாக இருந்தது.மேட்டூர் அணைக்கு 659 கன அடி நீர் வருகிறது.மேட்டூர் அணையில் இருந்து வினாடிக்கு 9,410 கன அடி நீர் வெளியேற்றபடுவதாக பொதுபணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.